
KALKI 7-3-1976 75 காசு
கல்கி
INDIA
INDIA
CRICKET
பெண்கள் கிரிக்கெட்!

புதிய அத்தியாயம்

இரண்டாகப் பிரிந்த நதியின் கிளைகள் மீண்டும் புதிய வேகத்துடன் ஒன்றாக இணைந்தன.

தாயைப் பிரிந்த கன்று அதனை மறுபடியும் கண்டதும் துள்ளிக் குதித்து நெருங்கியது; அன்பு மழையில் நனைந்தது.

நெடுநாட்களாகப் பிரிந்திருந்த சகோதரர்கள் ரத்தபாசம் பொங்க ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு மெய் சிலிர்த்தனர்.

இரண்டு காங்கிரஸ்களும் ஒன்றாய் இணைந்தன.

காமராஜரின் கடைசி விருப்பம் பரிபூரணமாக நிறைவேறியது.

கடற்கரையில் ஜனசமுத்திரம். ''கடலின் எல்லையைக் கண்டாலும் தலைகளின் எல்லையைக் காண முடியவில்லை'' என்றார் ஸ்ரீமதி இந்திரா. கடல் அலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு தொண்டர்களின் மனங்களில் மகிழ்ச்சி அலைகள் பொங்கின.

* * *

கல்கி

மலர் 35

இதழ் 32

'காமராஜரின் விருப்பம் இதுவல்ல' என்று எண்ணுபவர்கள் அவரை நன்றாக அறியாதவர்களே. தாமதித்தார் என்றால் அது, ஸ்தாபன காங்கிரஸின் பிற மாநிலத் தலைவர்கள் சிலரையும் தம்முடன் அரவணைத்துக் கொண்டு இணைந்தால் நன்றாயிருக்குமே என்பதற்காகத்தான். அது சாத்தியப்படாது என்று தோன்றவே தக்கதொரு சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தார். இல்லை, அந்தச் சந்தர்ப்பத்தைத் தாமே உருவாக்கித் தந்தார்; காங்கிரஸ் இணைப்புக்காகத் தம்மையே அர்ப்பணித்தார், அந்தத் தியாகசீலர்.

கப்பல் தலைவன் இல்லாத மாலுமிகள் போல் தவித்த காங்கிரஸ் ஊழியர்கள், ஸ்ரீமதி இந்திராவின் தலைமையை ஏற்றதைவிட இயல்பான ஒரு காரியம் இருக்க முடியாது. தாமதித்துத் திக்கு திசை தெரியாமல் தடுமாறாமல் சரியான முடிவுக்கு உடனே வந்த அவர்களை வாழ்த்துகிறோம்.

அவர்களைப் பெருந்தன்மையுடன் வரவேற்று ஏற்ற ஸ்ரீமதி இந்திரா அவர்களைப் போற்றுகிறோம்.

இணைப்புக்குச் சளியாமல் உழைத்த ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகரன், அந்தச் சேவையால் மாசற்ற மாமணியாக ஒளிர்கிறார். ஆலோசனைகள் கூறி உதவிய ஸ்ரீ ஆர். வேங்கடராமன் அவர்களைத் தமிழக காங்கிரஸ் என்றென்றும் நன்றியுடன் எண்ணும்.

தமிழ்நாடு காங்கிரஸின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்த விதத்திலும் அந்த ஸ்தாபனம் தன் விவேகத்தை வெளியிட்டிருக்கிறது.

திரு கருப்பையா மூப்பனாரின் செல்வாக்கு மிக்க பாரம்பரியத்தை மட்டும் வைத்து நாம் அவரை மதிப்பிட வேண்டியதில்லை. பதவி ஏற்றபின் கூறியுள்ள கருத்துக்கள் மூலம் அவர், தொண்டர்களும், அகில இந்தியத் தலைவர்களும் தம்மிடம் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது என்று மெய்ப்பித்துள்ளார்.

''கட்சி வேறு, ஆட்சி வேறு என்பதை மறந்து கட்சிக்காரர்களெல்லாம் கழக ஆட்சியின் அன்றாட அலுவல்களில் தலையிட்டதால் தான் தமிழகத்தில் ஒரு பரிதாபகரமான நிலை உருவாயிற்று''

என்றும்,

''இறையுணர்வை மறந்த ஆட்சி சரிவர இயங்க முடியாது; இறையுணர்வு உண்டாக்கும் பயபக்தியே நல்லாட்சிக்கு இன்றியமையாதது''

என்றும்,

''தமிழ்நாட்டின் கடந்தகால அரசியல் எனக்கு ஒரு படிப்பினையாக இருக்கிறது''

என்றும் திரு மூப்பனார் நமது நிருபர் அவரைச் சந்தித்தபோது

கூறியிருக்கிறார். இந்தக் கருத்துக்களே போதும் அவர் தகுதியை நிரூபிப்பதற்கு.

காமராஜின் தலைமையை இறுதி வரை ஏற்று உறுதியாக நின்ற ஒருவருக்குத் தலைமைப் பதவி வழங்கப்பட்டிருப்பதில் உள்ள பரந்த மனப்பான்மையையும் கண்ணியப் போக்கையும் இணைந்த காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொருவரும் உன்னி உணர்ந்து, அந்த ஸ்தாபனம் மேன்மேலும் பலம் பெறவும் மக்களிடம் செல்வாக்குப் பெறவும் பாடுபட வேண்டும். தன்னலம் என்பது தேடினாலும் இல்லை, மக்கள் நலனே முன்னணியில் நிற்கும் என்ற நிலை தோன்றட்டும்!

* * *

தமிழக சரித்திரத்தின் புதிய அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித்திருக்கிறோம் என்பதில் மனம் மகிழும்போதே பழைய அத்தியாயத்தை ஒருவாறு முடித்தோமே என்பதிலும் மகிழ்ச்சியும் நிம்மதியும் பெறுகிறோம்.

அந்தப் பழைய அத்தியாயத்தில்தான் எத்தனை எத்தனை பயங்கர நிகழ்ச்சிகள்! லஞ்ச ஊழல் பிசாசும், பிரிவினை அரக்கனும் அதிகார துஷ்பிரயோகப் பேயும் உலவி வந்து நல்லாட்சி என்ற கதாநாயகனை என்ன பாடு படுத்தின!

புதிய அத்தியாயத்தில் நல்லாட்சி என்ற கதாநாயகன் தன்னை ஆட்டிப் படைத்த பேய் பிசாசுகளிடமிருந்து விடுதலை பெற்று மீண்டும் புதிய தெம்புடன் புறப்பட்டிருக்கிறான், சாதனைகள் புரிய.

"ஆட்சியைத் தூய்மைப்படுத்துவதே எங்கள் முதல் பணி. லஞ்ச ஊழல் எங்கு ஒளிந்திருந்தாலும் கண்டுபிடித்துத் தண்டிக்காமல் விடமாட்டோம்" என்று ஆளுநரின் ஆலோசகர்கள் அழுத்தம் திருத்தமாக அறிவித்திருக்கிறார்கள்.

'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறோம்.

பொறுப்பை உணருங்கள்; பிடிவாதத்தைத் தளர்த்துங்கள்!

ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உண்டு: The ball is in your court.

பந்து உன்பக்கம் வந்துவிட்டது; இனி அதைத் தட்ட வேண்டியது உன் பொறுப்பு.

இதற்கு அர்த்தம்: நான் செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன்; சொல்ல வேண்டியதையும் சொல்லிவிட்டேன்; இனி உன் பொறுப்பு!

எதிர்க் கட்சித் தலைவர்களைப் பார்த்துப் பிரதமர் கூறியுள்ளது அவர்களை இந்த நிலையில் வைத்திருக்கிறது. பொறுப்பை அவர்கள் தலையில் சுமத்தி யிருக்கிறது.

"நெருக்கடி நிலைப் பிரகடனத்தை வாபஸ் பெற நான் தயார்; ஆனால் அதற்கு முன் ஒழுக்கம், நன்னடத்தை ஆகியவற்றை நீங்கள் உறுதி கூறவேண்டும்" என்று பிரதமர் பொறுப்பை எதிர்க் கட்சித் தலைவர்கள் தலையில் கட்டியிருக்கிறார்.

அந்நியர் ஆட்சியில் ஜனநாயக உரிமைகள் ஒன்றுமே இல்லாத நிலையில் காந்திஜி சத்தியாக்கிரஹம் என்ற ஆயுதத்தைக் கையாண்டார். அஹிம்சா முறையில் ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்தார்.

அந்தச் சாணக்கியத்தைச் சுதந்திர பாரதத்தில் கையாள வேண்டுவதில்லை. இங்கே கருத்துச் சுதந்திரம் இருக்கிறது. மாற்றுத் திட்டங்களைச் சமர்ப்பித்து மக்கள் ஆதரவைத் தேடவும் தேர்தலில் வெற்றி பெற்றுப் பதவிக்கு வரவும் வாய்ப்பு இருக்கிறது.

எடுத்ததற்கெல்லாம் சத்தியாக்கிரஹம் என்று ஆரம்பித்தால் நாடு முன்னேற முடியாது. உற்பத்தி பெருகுவதற்குப் பதில் ஹர்த்தாலும் கதவடைப்பும்தான் பெருகும். பொருளாதாரம் செழிப்பதற்குப் பதில் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும்தான் செழிக்கும்.

அத்துடன் போயிற்றா? உணர்ச்சி வசப்பட்டுச் சாந்தியப் பாதையிலிருந்து விலகி வன்முறைகளிலும் இறங்கிவிடுகிறோம். இதில் எதிர்காலச் செல்வங்களான மாணவ மணிகளையும் இழுத்து விட்டு விடுகிறோம்.

இதெல்லாம் கூடாது என்கிறார் பிரதமர். "வாக்களியுங்கள்; நெருக்கடி நிலைப் பிரகடனம் வாபஸ் பெறப்படும்" என்கிறார்.

இந்த வாக்குறுதியை அளிப்பதில் தடை ஏதும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

இதில் பிடிவாதமாக இருப்பவர்கள் நாட்டுக்கோ, மக்களுக்கோ, ஜனநாயகத்துக்கோ நன்மை செய்தவர்களாக மாட்டார்கள்.

நெருக்கடி நிலைப் பிரகடனம் நீங்க ஒத்துழைப்பது முதல் வேலை.

தேர்தல் முறைகளில் மாற்றங்களோ, அல்லது வேறு கோரிக்கைகளோ அவற்றை அன்பினால் சாதித்துக் கொள்ள முயல்வது அடுத்த வேலை.

பந்து எதிர்த் தரப்பில் இருக்கிறது.

என்ன சேதி?

பட்ஜெட் வருகிறது!

பட்ஜெட் வருகிறது; பயமாக இருக்கிறது!

பாராளுமன்றத்தின் ஆலோசனைக் குழு கூறியுள்ள நல்ல பல யோசனைகளை அரசு ஏற்குமென்றால் நாம் பயப்படத் தேவையில்லை!

வருமான வரியையும் மற்றும் பல வரிகளையும் இன்னும் கொஞ்சம் நியாய உணர்வோடு விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது இந்தக் குழு.

பண வீக்கத்துக்கு இடம் அளிக்காமலேயே முதலீடுகள் பெருகவும் தொழில் நிறுவனங்கள் இன்னும் அதிக ஆற்றலுடன் செயலாற்றவும் பட்ஜெட் எப்படி அமையலாம் என்பதற்கு நல்ல பல யோசனைகளைக் கூறியுள்ளது.

நியாய உணர்வோடு, வருமான வரி விதிக்கப்பட்டால் கறுப்புப் பண உற்பத்தி இராது என்பதையும் வரி வசூல் இன்னும் திறம்பட நடப்பதன் மூலம் அரசுக்கு வருவாய் பெருகவே செய்யும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஏன், சஞ்சய் காந்திகூட கல்கத்தாவில், ''வலதுசாரி இடதுசாரி என்ற கொள்கைப் பிடிவாதமெல்லாம் வேண்டாம்; உற்பத்தி பெருகுவதன் மூலம் விலைவாசிகள் குறைவதே முக்கியம்'' என்று அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பேசியிருக்கிறார். 1974ல் வரி விகிதங்கள் சற்றுக் குறைக்கப்பட்டபோது அரசுக்கு வரி வருவாய் அதிகரிக்கவே செய்தது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

திரு சி. எஸ். நம் வயிற்றில் பால் வார்க்க வேண்டுல்.

மஸானி வழக்கு

புதையல் கிடைத்தாலும் இத்தனை சந்தோஷம் உண்டாகாது.

தேவேந்திர பதவியே கிடைத்தாலும் இத்தனை மகிழ்ச்சி ஏற்படாது.

பம்பாய் உயர்நீதிமன்றம் மஸானி வழக்கில் அளித்த தீர்ப்பு அத்தனை குதூகலத்தைப் பத்திரிகையாளரிடம் ஏற்படுத்தியுள்ளது.

சென்ஸார் என்பது, ஜனநாயகத்தின் உயிர் மூச்சான அபிப்பிராய சுதந்திரம் அத்துமீறிப் போகாமல் காக்கவே யன்றி ஒரேமாதிரியான அபிப்பிராயத்தை உருவாக்க அல்ல என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார் நீதிபதி.

அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் நீதிபதியின் தீர்ப்புக்கும் இடையில் வித்தியாசம் ஏதும் இருக்க முடியாது. அதனால்தான் இன்று அரசு, தணிக்கையைப் பத்திரிகைகளே நடத்திக் கொள்ளலாம் என்றும் அதிகாரிகளிடம் முன்கூட்டியே சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டியதில்லை என்றும் தீர்மானித்திருக்கிறது. என்றாலும் தணிக்கை அதிகாரிகளுக்கு இன்னமும் அவசியம் இருப்பதாகவே கருதுகிறது, அரசு.

இந்த அதிகாரிகள் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒரு முறைக்குப் பன்முறை முழுமையாகப் படித்து மனத்தில் வைக்கவும் மதிப்புக் கொடுக்கவும் வேண்டும்.

உன்னத பதவி

பாரதத்தின் பல்வேறு மாநிலங்களிலும் தொழில் வர்த்தக அதிபர்களின் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்தச் சங்கங்கள் அனைத்தும் இணைந்த ஒரு கூட்டமைப்பும் உண்டு. எஃப். ஐ. ஸி. ஸி. ஐ. என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்தச் சங்கத்தின் முழுப் பெயர் Federation of Indian Chambers of Commerce and Industry. நாட்டின் பொருளாதாரம் மேம்பட அரசுக்கும் தொழிலதிபர்களுக்கும் அரிய பல யோசனைகளைக் கொடுத்து உதவுகிற இந்த மிக உயர்ந்த அமைப்பின் உன்னதமான தலைமைப் பதவி திரு எம். வி. அருணாசலம் அவர்களை வந்தடைந்திருக்கிறது. டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான இவர் வேறு பல நிறுவனங்களிலும் உயர் பதவிகளை வகிப்பவர்.



பாரதம் தொழில் முன்னேற்றத்தில் முழு மூச்சுடன் ஈடுபடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும்போது எஃப். ஐ. ஸி. ஸி. ஐ. அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார் திரு அருணாசலம். இந்த அமைப்பின் பொன் விழா ஆண்டு இது. அருணாசலத்தின் பணியும் பொன்னான பணியாகி இந்தியாவின் எதிர்காலம் பொன் மயமாக விளங்க உதவட்டும்.

ராஜாஜி சிந்தனை

புதுமுறை வரட்டும்!

முற்காலத்தில் பாடசாலைகளில் மாணவர்களிடம் கோபச் சொற்களும் பிரம்பும் உபயோகித்தார்கள். அப்படி உபயோகியாத பாடசாலை பிரயோசனமில்லை என்று கூடப் பிள்ளைகளின் பெற்றோர்கள் எண்ணினார்கள். ஆனால் இந்தக் காலத்தில் அன்பு, மகிழ்ச்சி, சிரிப்பு ஆகிய ஆயுதங்களையே உபயோகிக்கிறார்கள். பிள்ளைகளை அடிக்கும் ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கிவிடுகிறார்கள். அதுபோலவே அரசியலிலும் இந்தக் காலத்தில் வெறுப்பு முறை கையாளப்பட்டு வருகிறது. புது முறை வரும் காலமும் உண்டு. கல்வித் துறையில் பழைய ஆசிரியர் மறைந்து புதிய ஆசிரியர் தோன்றியிருப்பது போலவே அரசியல் துறையிலும் பலாத்கார முறை மறைந்து அன்பு முறை தோன்றும். பலாத்கார முறையை விட அன்பு முறையே அதிகப் பலம் பொருந்தியதும் பயன் தருவதுமாகும் என்பதை அப்போது அறிந்து கொள்வோம்.

— ராஜாஜி மணிவாசகம்

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்:

தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

போர்ஹேன்ஸ் பற்பசையைத் தவறாமல் உபயோகிப்பவர்கள் தாங்களாகவே கூறுகிறார்கள்:

"இப்பொழுது எனக்கு வயது இருபது. நான் பனிரெண்டு வயது முதலே போர்ஹேன்ஸ் உபயோகித்து வருகிறேன். முதன் முதலாக போர்ஹேன்ஸ் உபயோகிக்கத் தொடங்கியபோது, என் ஈறுகளுக்கு சிறிது தொல்லை ஏற்பட்டது. ஆனால் இப்போது அது சரியாகிவிட்டது: தொல்லை ஏதும் இல்லை..., முதலில் நான் இரவில் பற்களைத் துலக்குவதில்லை. இரவில் 10 மணிவரை படிப்பது வழக்கம். அப்போது தினமும் உங்கள் விளம்பரம் 'ஒரு புதிய பழக்கத்தை நினைவுறுத்தும்'"

(கையொப்பம்)
எஸ். மித்தல், பி.ஏ. (எலெக்ட்ரிகல்),
பாட்டியாலா.

"நான் புகை பிடிப்பவன் அல்ல. எனினும், ஓர் ஆண்டுக்கு முன்பு, என் பற்கள் மஞ்சளாக இருப்பதைக் கவனித்தேன். முப்பது ஆண்டுகளாக போர்ஹேன்ஸ் உபயோகித்து வரும் என் தந்தை, நான் உபயோகித்து வந்த பற்பசையை விட்டு விட்டு, போர்ஹேன்ஸுக்கு மாற்றிக் கொள்ளச் சொன்னார். அப்படியே செய்தேன்; என்ன ஆச்சரியம்! இப்பொழுது என் பற்கள் வெண்மையாகப் பளிச்சிடுகின்றன. அதற்குக் காரணம் உங்கள் போர்ஹேன்ஸ் பற்பசைதான். நீங்கள் கூறும் சிறப்புகள் அனைத்தும் அதில் உள்ளன. **ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை அது** என்பது மட்டுமே போதும் அதன் சிறப்புக்கு!

(கையொப்பம்) எஸ்.எஸ். சட்டர்ஜி,
கோயம்புத்தூர்.



(மேற்கண்ட சான்றிதழ்களின் புகைப்பட நகலை ஜெப்ரீ மேனர்ஸ் & கம்பெனி லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.)
சீரான பற்பராமரிப்புக்கு இரவிலும் காலையிலும் போர்ஹேன்ஸ் பற்பசை மற்றும் போர்ஹேன்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷ் உபயோகியுங்கள்... உங்கள் பல் வைத்தியரையும் தவறாமல் கண்டு வாருங்கள்.

இலவசம்! "உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விரமான வண்ணப் புத்தகம்.
இப்புத்தகம்* பெற- (தபால் செலவுக்காக) 25 பைசா தபால் தலையுடன் இக் கூப்பனை "மேனர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய்-1" என்னும் முகவரிக்கு அனுப்புக.

பெயர் ____________________ வயது ________

முகவரி: ______________________________

*எந்த மொழியில் வேண்டுமோ, அதன் கீழ் கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, பஞ்சாபி, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

போர்ஹேன்ஸ் – பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை

TO-101

129 F-182 TAM

வேதமதத்தின் விசேஷ அம்சங்கள் 4

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

எல்லாமே ஸ்வாமி என்பது ஒரு நிலை; அது நம்மால் கிரகிக்க முடியாத நிலை. அப்புறம் உயர்வானதிலெல்லாம் ஸ்வாமி விசேஷமாகக் குடிகொண்டிருப்பதாக கீதையின் விபூதி யோகத்தில் சொன்ன நிலை. மனித வாழ்வில் இந்த உயர்வை ஏற்படுத்துவதற்காகத் தன் தூதர்களாக அவன் ஆசாரிய புருஷர்கள், மகான்கள், ஞானிகள், யோகிகள் பக்திமான்களை அனுப்பி வைப்பது ஒரு நிலை. இதெல்லாமும் போதவில்லை என்று தானே ஓர் அவதாரமாக இந்த லோகத்துக்கு இறங்கி வருகிறது ஒரு நிலை. 'அவதரணம்' என்றால் 'இறங்கி வருவது' என்றே அர்த்தம். பரத்துக்குப் பரமாக, பராத்பரமாக – 'அப்பாலுக்கு அப்பால்' என்பார்கள், அப்படி இருக்கப்பட்ட – ஈசுவரன் இறங்கி வந்து நமக்கு நடுவில் பிறந்து தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணுவது அவதாரம் எனப்படுகிறது.

சித்தாந்த சைவர்கள் சிவபெருமான் அவதரித்ததாக ஒப்புக் கொள்வதில்லை. ஆதி சங்கர பகவத் பாதாள் ஈசுவராவதாரம், ஞான சம்பந்தர் முருகனின் அவதாரம் என்றெல்லாம் சொல்வதை அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். கர்ப்பவாஸம் செய்வது, மாமிச மயமான நர தேகத்தில் இருப்பது எல்லாம் ஸ்வாமிக்கு இழுக்கு என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அத்வைதிகளுக்கோ கர்ப்பவாஸம் செய்து மாம்ஸ சரீரத்தில் இருக்கிற இத்தனை பேருமே சாரத்தில் பிரம்மம்தான். ஆகையால், ஈசுவராவதாரத்தில் அவர்களுக்கு நிஷித்தமாக எதுவும் தெரியவில்லை. ஸித்தாந்த ரீதியில் வைஷ்ணவர்களுக்கும் சைவர்களுக்கும் பல ஒற்றுமை இருந்த போதிலும், முக்தியில் ஜீவனானவன் பிரம்மமே ஆகிவிடுகிறான் என்ற அத்வைதத்தை வைஷ்ணவர்கள் அப்படியே ஒப்புக் கொள்ளாத போதிலும், வைஷ்ணவர்கள் யாவரும் அவதாரக் கொள்கையை ஒப்புக் கொள்கிறார்கள். பொதுவாக லோக வழக்கிலும் அவதாரம் என்றாலே மஹா விஷ்ணுவின் தசாவதாரங்கள்தான் நினைக்கப் படுகின்றன. வைஷ்ணவர்கள் அவதாரங்களை ஒப்புக் கொள்வதற்குக் காரணம், அவர்கள் பகவான் பரம காருண்யன் ஆனபடியால் ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காகத் தன்னை எவ்வளவு வேண்டுமானாலும் குறைவு படுத்திக் கொள்வான் என்று நம்புவதுதான்.

உள்ளுக்குள்ளே, தான் ஸ்வாமியே என்று நன்றாகத் தெரிந்து கொண்டு, வெளியிலே ஏதோ மநுஷ்யன் போல் வேஷம் போடுவதால் அவருக்குக் கொஞ்சம்கூட தோஷமோ, குறைவோ வந்துவிடவில்லை.

சைவ ஸித்தாந்திகள்கூட, சிவன் அவதாரம் செய்வதை ஒப்பாவிட்டாலும் மஹா விஷ்ணுவின் தசாவதாரங்களை ஆட்சேபிப்பதில்லை.

மொத்தத்தில் ஹிந்து மதம் எனப்படும் வைதிக நெறி அவதாரக் கொள்கையை ஏற்கிறது என்றே சொல்லிவிடலாம்.

• • •

அரூபமான ஒரே பரமாத்மா பல ரூபங்களில் பல தேவதைகளாக வருகிறதென்று சொல்லி, அவற்றுக்காக விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தியிருப்பது நம் மதத்தின் இன்னொரு பிரத்தியேக அம்சம். அவரவர் மனசுக்குப் பிடித்த மாதிரி ஓர் இஷ்டதேவதையைக் கொள்ளவும் இதுவே இடம் தருகிறது. இதனால் அந்நியர்கள் நம்மைப் பல தெய்வக் கொள்கையினர் (Polytheist) என்கிறார்கள். இப்படிச் சொல்வது சுத்தத் தப்பு. ஒரே தெய்வத்தைப் பல ரூபத்தில் வழிபடுவது பல தெய்வங்கள் இருப்பதாக எண்ணுவதாகாது.

நம் அப்பா ஆபீசுக்குப் போகும் போது



வைத்துக் கொள்ளக் கூடத் தெரியாத ஒரு பெண்ணுடன் இத்தனை ரசனை மிக்க வாசுதேவன் எப்படிக் குடித்தனம் செய்கிறார் என்பது. வித்யாவுக்கு ஒரு புதிராக இருந்தது. இந்தச் சிந்தனையின் அடிப்படையில் அவர் மீது கிளர்ந்த பரிவு பாசமாகி, பின்னர் நாளடைவில் இப்படிப் பிரிக்க முடியாத பிரேமையாகவே வளர்ந்து விட்டது.

வித்யா ஆசிரியையாகப் பணியாற்றும் பள்ளியின் ஆண்டு விழாவுக்கு வாசுதேவனைத் தலைமை தாங்க அழைத்திருந்தார்கள். அவருடைய எழுத்துக்கள் மூலம் அவரைத் தெரிந்து கொண்டு, மனத்தில் அவரைப் பற்றிக் கோபுரமாக மதிப்பை வளர்த்துக் கொண்டிருந்தவள் அன்றுதான் அவரை நேரில் கண்டாள். பேச்சில், பழகும் பண்பில் எல்லாம் அவரது எழுத்தில் மிளிரும் நளினத்தின் மாற்றுக் குறையாத் தன்மையைக் கண்டபோது அவள் மதிப்பில் அவர் இன்னும் உயர்ந்து போனார்.

அவருடைய ரசிகை என்று தன்னை அவருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டாள் அவள்.

அப்போது அவளைக் கனிவுடன் பார்த்து முறுவலித்த அவர் முகம்தான் அப்படியே சட்டம் போட்டு மாட்டி வைத்த படமாக அவள் நெஞ்சில் பதிந்து விட்டது. அந்தப் படத்தில் தூசு தும்பு படியாமல் அதே இடத்தில் வைத்துப் பூசித்து வருகிறாள் அவள்.

அவளை ரசிகையாக அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த நாளை அவரும் மறக்கவில்லை. அவரைப் பொறுத்தவரை, அவரை நன்றாகப் புரிந்துகொண்ட ரசிகை வித்யாதான்!

அவளால் அந்த எல்லையில் மட்டும் நின்று திருப்திப்பட்டுக் கொள்ள முடியவில்லை. பழக்கத்தின் காரணமாகப் பள்ளிக்கூடத்துக்குப் போய், தன் கடமையை ஆற்றிவிட்டு வந்து கொண்டிருந்தாளே தவிர, அவளுக்கு எந்த

விசாலமான பெரிய வீடு. புத்தக அலமாரிகள் நிறைந்த மாடி அறை. வீட்டைச் சுற்றிச் சின்னஞ் சிறிய தோட்டம். வசதியான சூழ்நிலைதான். என்றாலும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் வித்யாவின் வீட்டுக்கு வந்திருந்தவர் அந்தச் சூழ்நிலை பிடித்துப் போய் அங்கே உட்கார்ந்து ஓர் அருமையான கதையை எழுதி முடித்து விட்டார். தம் படைப்பை வித்யாவுக்குப் படித்துக் காண்பித்து அவளது இதயபூர்வமான பாராட்டுக்களைப் பெற்றபோது கிடைத்த இதம் தமக்கு எப்போதுமே தேவை என்று அவர் உணரத் தலைப்பட்டார்.

அதன் பின்....

பெரும்பாலும் வித்யாவின் வீட்டைத்தான் தமது எழுத்துக் கூடமாகப் பயன்படுத்திக் கொண்டார் அவர்.

உறவு என்று சொல்லிக் கொள்ள வித்யாவுக்கு இந்த உலகத்தில் யாருமே இல்லை. தாயும் தந்தையும் ஒரே சமயத்தில் ரயில் விபத்தில் பலியான பின்பு, அவள் தனி மரமாகத்தான் நின்று கொண்டிருந்தாள். ஆயின் அந்த மர நிழலில் வாசுதேவன் வந்து இளைப்பாறத் தொடங்கிய பிறகு அவளுக்குத் தான் தனியானவள் என்ற உணர்வே அற்றுப்போய் விட்டது.

கோடை நாட்களில், குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ, ஊட்டிக்கோ போய் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார், வாசுதேவன். வித்யாவுடன் பழகத் தொடங்கின பிறகு வந்த கோடையில் குற்றாலத்துக்குக் கிளம்பினார்.

அப்போது கோடை விடுமுறையாக இருந்ததால் வித்யாவும் அவருடன் குற்றாலத்துக்குச் சென்றிருந்தாள். அவள் வாழ்வில் மறக்க முடியாத நாட்கள் அவை.

அவளுடன் எவ்வளவோ உரிமையுடன் பழகி வந்தபோதிலும் எவ்வித சலனங்களுக்

நேரமும் அவர் நினைப்புத்தான். அப்படி நாளுக்கு நாள் அதி தீவிரத்துடன் தன் மனம் அவரிடம் ஈர்க்கப்படுவதை அவளால் தவிர்க்கத்தான் முடியவில்லை.

வாசுதேவனும் பானுமதியும் மலடுகள் இல்லை என்பதை நிரூபிக்க வந்ததைப் போல் அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. சொல்லி வைத்தாற்போல ஒவ்வொன்றும் ஒரு வயதுவரை வாழ்ந்துவிட்டுப் போய்ச் சேர்ந்து விட்டன. அதன்பிறகு அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. பானுவுக்கு அதைப் பற்றிக் குறை இருந்ததோ என்னவோ, அவர் அப்படி ஏதும் குறை பாவித்ததே இல்லை. பானுமதிக்குத் துணையாக வீட்டோடு அவருக்கு ஒன்றுவிட்ட தங்கை ஒருத்தி இருந்தாள். சமையல் மட்டும் அல்லாமல் வீட்டு வேலைகளையும் அவள்தான் கவனித்துக்கொள்வாள்.





"பச்சைக் கலர் லிப்ஸ்டிக் இருக்கிறதா?"

"பச்சைக் கலரில் லிப்ஸ்டிக்கா?"

"ஆமாம். என் காதலர் ஒரு ரயில் கார்டு! இன்று எங்கள் திருமணத்துக்கு என் சம்மதத்தைக் கேட்டிருந்தார்!"

— முத்து

கும் இடம் கொடாத எல்லையில் நிற்கத் தெரிந்து கொண்டிருந்தார் வாசுதேவன்..

எப்போதோ ஒரு முறை "நீ ஏன் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது?" என்று அவர் அவளைக் கேட்டிருக்கிறார்.

அவள் அதற்குப் பதில் சொல்லவில்லை. சோகமும் நாணமும் நிறைந்த ஒரு பார்வையால் அவர் முகத்தை அளந்தாள். ஒரு பெருமூச்சு விட்டாள்.

அவர் அந்த நிலையை நீடிக்க விரும்பவில்லை.

"ஏன் வித்யா, ஆண்டாளின் கதை டிரேஜடியா, காமெடியா...?" என்று எதையோ கேட்டு அவள் கவனத்தைத் திசை திருப்பி விட்டார்.

ஆயின், இந்தக் குற்றாலம் வாசம் ஏற்படுத்திக் கொடுத்த சூழ்நிலை, அவர் தவிர்த்து வந்த பேச்சுக்களை அவர்களிடையே மூட்டி விட்டு விட்டது.

ஒரு நாள் மாலை இதமான காற்றில் ஈரத் தலையைக் கோதிக் கொண்டு அவர்கள் தங்கியிருந்த மாடி அறையின் பால்கனியில் நின்று கொண்டிருந்தாள் வித்யா. உள்ளே கட்டிலில் சாய்ந்து கொண்டு வெளியே பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவன் அவளுடைய அந்தத் தோற்றத்தில் சற்று மெய் சிலிர்க்கத்தான் செய்தார்.

"வித்யா! இப்போது இங்கே ரவிவர்மா இருக்க வேண்டும்!" என்றார் அவர் உணர்ச்சிப் பரபரப்புடன்.

"ஏனாம்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்து கட்டிலில் அவர் காலடியில் அமர்ந்து கொண்டாள் அவள்.

"நீ இப்போது தலையைக் கோதிக்கொண்டு நின்றாயே, அந்தக் காட்சியை அப்படியே படமாக வரைந்து விட மாட்டானா?"

"நீங்கள் ரசித்தால் எழுத்தில் வரைந்து விடுங்களேன்!"

"நான் ரசிக்கலாமா வித்யா...?"

"நிஜமாகவா...?" அவள் கண்களில் பனிச்சிட்ட ஆவலும், குரலில் தொனித்த உணர்ச்சிப் பரவசமும் அவரை அயரவைத்தன.

அவள் அவர் கால்களைப் பற்றிக் கொண்டு விட்டாள்.

"எனக்கு எல்லாமுமாக நீங்கள் இருங்கள். உங்கள் ரசிகையாக மட்டுமல்லாமல் என்னை உங்கள்...."

அவர் அவளை மேலே பேசவிடவில்லை.

"வித்யா...!" என்ற அவருடைய அதட்டலில் அவள் தான் சொல்ல வந்ததைச் சொல்லாமலே அடக்கி விட்டாள். ஆயின் நெகிழ்ச்சி தளராத நிலையிலேயே "ஊ....ம்" என்றாள்.

"நான் அழகை ஆராதிப்பவன் வித்யா. எங்கே அழகிருந்தாலும் அதற்கு நான் ரசிகன். அப்படித்தான் உன்னையும் நான் ரசிக்கிறேன். அந்த எல்லையை மீறிப் போய் என் அழகுணர்ச்சியை நான் அசிங்கப்படுத்திக்கொள்ளத் தயாராய் இல்லை...!"

"நீங்கள்.... நீங்கள்...." என்று சொல்லவறியாது தடுமாறினாள் வித்யா.

"உன்னைப் பொறுத்தவரை, நீ என் எழுத்தையோ என்னையோ ரசிப்பதைத் தடுக்கும் உரிமை எனக்கு இல்லை. நீ சுதந்திரமான பெண். உன் அழகுணர்ச்சி என்மீது எப்படிப் படிந்தாலும் அது புனிதமானதுதான். ஆனால் அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து அக்கினி சாட்சியாக நான் பானுவைக் கைப் பிடித்தேன். அவள் அழகை, இளமையை ரசித்து, அவள் மூலம் இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனானேன். அவள் என் மனைவி. தெய்வ சாட்சியாக அந்த இடத்தை அவளுக்குக் கொடுத்துவிட்ட பிறகு அங்கே வேறு யாருக்கும் இடம் இல்லை. உன்னுடைய ரசனை என் இலக்கியப் பயிருக்கு உரமாகத் தேவைப் படுகிறது. ஆகவே, உன் ரசனையை விரும்பி, உன்னை என் முழு முதல் ரசிகையாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இது சுயநலம்தான்.. இல்லை என்று சொல்லவில்லை. இந்தக் குற்றத்துக்கும் என்மீது உனக்கு இப்படி ஓர் ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்த குற்றத்துக்கும் நான் பொறுப்பாளிதான். ஆனால் எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்டுள்ள சில பண்பாட்டுத் தளைகளை நான் மீற முடியாது. மீற மாட்டேன்!"

பேசி முடித்த ஆயாசத்தில் அவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார். அவர்களுக்கிடையே கனமாக இறங்கிவிட்ட அந்த நிசப்தத் திரையை அவர்தான் விழிக்கவேண்டியிருந்தது.

"என்மேல் கோபமா வித்யா...?"

"அப்படியெல்லாம் கேட்காதீர்கள். என்னால் உங்கள் மீது கோபப்பட முடியுமா? உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. உங்களை நான் மாறும்படி கேட்க மாட்டேன். ஆனால் என்னால் என் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லையே...!"

குற்றாலத்துக்குப் போய் வந்த பிறகு என்ன காரணத்தாலோ அவர் உடல்நிலை தளர்ந்து போய்விட்டது. முன்னைப் போல் இரவு முழுக்கக் கண் விழித்துக் கொண்டு இப்போதெல்லாம் அவரால் எழுத முடியவில்லை. என்றாலும், பழக்கத்தின் விளைவாய் எழுத உட்கார்ந்து விட்டால், அதில் ஏற்படும் லயிப்பில் கட்டுண்டு விடுவதால், தம் உடல்நிலையையும் மறந்து அவர் எழுதிக் கொண்டிருப்பார்.

மணி இரண்டு அடித்தது. அவர் இன்னும் எழுதிக் கொண்டிருந்தார்.

"மணி இரண்டாகிறது. ஏற்கெனவே உடம்பு சரியில்லை. இப்படி விழித்துக்கொண்டிருந்தால்...?"

"என்னைக் கவனிக்கத்தான் நீ இருக்கிறாயே?" என்று சொல்லிக் கொண்டே எழுந்து உள்ளே போனார் அவர்.

மேசையை ஒழுங்கு செய்துவிட்டு, ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு, வெளி விளக்கை அணைத்துவிட்டு அவள் உள்ளே போவதற்குள் அவர் தம் படுக்கையறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டு விட்டார்.

அந்த அறை வாசலில் நின்று ''குட் நைட்!'' என்றாள் அவள்.

விடிவிளக்கின் மங்கல் ஒளியில் ஒரு தேவதை போல் நின்ற அவளைப் பார்த்து அவரும் ''குட் நைட்'' என்று பதிலுக்குக் கூறினார். அவர் குரலில் கூட மெல்லிய விம்மல் ஒலிக்கத்தான் செய்தது.

காலையில் காப்பி குடித்துவிட்டு எழுத உட்கார்ந்தவர் ஒன்பது மணி அடிப்பதற்குள்ளாகவே எழுதி முடித்து விட்டார். எழுதியதைப் படித்துப் பார்த்தபோது அவருக்குத் திருப்தியாகத்தான் இருந்தது. ஆயினும், எப்போதும் போலில்லாமல் அன்று ஏனோ மிகுந்த களைப்பாக இருந்தது அவருக்கு.

''வித்யா...!'' என்று கூப்பிட்டார் அவர்.

சிறுமியைப் போலத் துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளிருந்து ஓடி வந்தாள் அவள்.

''என்ன இது...? உங்களுக்கு என்ன செய்கிறது?...''

''ஒன்றுமில்லை வித்யா. களைப்பாக இருக்கிறது. இலேசாக நெஞ்சை வலிக்கிறது. அவ்வளவுதான்." ஒரு டாக்ஸியைக் கூப்பிடு. நான் வீட்டுக்குப் போகிறேன்.''

'இது உங்கள் வீடு இல்லையா?' என்று கேட்க நினைத்த வித்யா கேட்கவில்லை.

''பாலாஜி! போய் ஒரு டாக்ஸி கொண்டு வா!'' என்று வேலைக்காரனுக்குக் குரல் கொடுத்தாள்.

''நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள்!'' என்று அவரை மறுபடியும் உட்காரச் செய்துவிட்டு வந்தாள். எழுதியிருந்த தாள்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கி ஃபைல் கேஸில் கட்டி வைத்தாள்.

''டாக்டரை அங்கேதானே வரச் சொல்லியிருக்கிறாய்?'' என்று கேட்டார் அவர்.

''ஆமாம்...'' என்றவள், ''இது என்ன பிடிவாதம் உங்களுக்கு?'' என்றும் கேட்டு வைத்தாள்.

அவர் அவளையே பார்த்துக் கொண்டுதான் பேசினார். ''எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது வித்யா. ஏதாவது ஆகிவிட்டாலும் அது அங்கேதான் நடக்க வேண்டும்.''

''அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.. என்னை விட்டு விட்டுப் போய்விடாதீர்கள்!'' என்று சிறு குழந்தை போல் அழ ஆரம்பித்து விட்டாள் வித்யா.

அவர் பரிவுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டார். ''வித்யா! அப்படியே இந்த உயிர் போனாலும் அது உன்னை விட்டுப் போனதாக ஆகாது. ஏன் தெரியுமா? இதோ என் படைப்புக்கள், என் சிந்தனைகள் எல்லாம் உன்னைச் சுற்றி உயிரோடு எப்போதும் இருக்கும். ஆனால்... பானுவுக்கு...? இந்த வாசுதேவன் என்ற மனிதன்தான் அவளுக்கு எல்லாம்! அவனை இழந்துவிட்டால் அவளுக்கு ஒன்றுமே இல்லை. உன்னைப் பொறுத்தவரை இலக்கியவாதி வாசுதேவன் எழுத்து மூலம் உன்னிடம் பேசிக் கொண்டு எப்போதும் இருப்பான்!"

''நீங்கள் தத்துவம் பேசுகிறீர்கள்...! என் தவிப்பு உங்களுக்குப் புரியாது. நான்.... நான்....'' என்று விம்மினாள் அவள்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது.

"இதயம் பலவீனமாக இருக்கிறது. ஓய்வு தான் தேவை!'' என்று சொல்லி ஏதோ இஞ்செக்ஷன் செய்துவிட்டுக் கிளம்பினார் டாக்டர்.

பானுவும் அத்தையும் வாசுதேவனின் கட்டிலுக்கு அருகில் கவலையோடு நின்றுகொண்டிருந்தார்கள்.

''உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று வாசுதேவனைப் பார்த்து ஏதோ வேற்று மனுஷி போலச் சொல்லும்போது தான் அந்நியமாகி விட்ட அவலம் வித்யாவை வதைத்தது.

''நான் போய்விட்டு அப்புறம் வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

வாசுதேவன் தூங்கிக் கொண்டிருந்தார். பொங்கி வரும் கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு வித்யா வெளியே வந்தாள்.

அவளுடைய வாசுதேவன் .... அவளைப் பொறுத்தவரை அவளுடைய வாசுதேவன் தான்! ஓ...! அவர் இப்போது எங்கோ போய் விட்டாரா...?

தெருவில் இறங்கிய பிறகு...

அவளால் கண்ணீரை அடக்க முடியவில்லை. நிர்க்கதியாக விடப்பட்ட உணர்வுடன் அழுதுகொண்டே நடந்தாள் அவள். எதிரே பரந்து கிடந்த மைதானத்தின் எல்லையில் வானம் கீழிறங்கிப் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கும் பொய்ம்மை அவளை எதிர் கொண்டது.

அதன் பின்....

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இரண்டு முறை அவரைப் பார்க்க வரத்தான் செய்தாள் அவள்.

வாசுதேவன் மிகவும் தளர்ந்து போயிருந்தார். ஒன்றிரண்டு நிமிடங்கள் அவருடன் பேசிக் கொண்டு இருந்துவிட்டுக் கிளம்பி விட்டாள் அவள்.

அதற்குப் பிறகு ஒரு நாள்தான் அவள் அங்கு வரும்படியாயிற்று.

வாசுதேவன் மறைந்து விட்டார்.

செய்தி அறிந்து வந்திருந்த எத்தனையோ ரசிகர்களுடன் அவளும் ஒருத்தியாக அங்கு வந்து நின்று அழுது கொண்டிருந்தாள். பானுவைப் போல் அவர் உடல் மீது விழுந்து புரண்டு அழ அவளுக்கு உரிமை இல்லை.

ஆயினும்... அவளைப் பொறுத்தவரை அவர் அவளுடைய வாசுதேவன்தான்!

கண்ணீரைத் துடைத்துக் கொள்ளும் போதே, தன் நெற்றிக் குங்குமத்தையும் சேர்த்து அழித்து கொண்டு அவர் சடலத்தைப் பார்த்து மானசீகமாக வணங்கினாள், அந்தத் தாலி கட்டிக் கொள்ளாத பத்தினிப் பெண்.



இளைஞர்கள், பணம்தான் எல்லாம் என்று கற்பனை செய்து கொள்கிறார்கள்; வயதானதும்தான் அது உண்மை என்று அவர்களுக்குப் புரியும்.

ஸ்டீவன்ஸன் — ராமு



ஆழ்ந்து-குணமாக்கும்
அமிர்தாஞ்சன் டெர்மல்
ஆயின்ட்மென்ட், படை, சொரி,
நமைச்சல் போன்ற பல
சாதாரண சருமத்தொல்லை
களைத் தீர்க்கும் சக்தி மிக்க
நிவாரணி. இன்றே
ஒன்று வாங்குங்கள்!
Amrutanjan
dermal
Ointment
for
RINGWORM · ECZEMA ETC
அமிர்தாஞ்சன்
டெர்மல் ஆயின்ட்மென்ட்
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14/15 லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004
உங்கள்
சருமத்தை
பாதுகாத்துக்
கொள்ளுங்கள்

SAA/AM/1905

• **பி**ள்ளை நாட்டுப் பெண்ணோடு நாள் கணக்கில் தங்கினால் மரியாதை கெட்டுப் போகும் என்று திடமாக நம்புபவள் பார்வதி. ஆனால் பாசம் யாரை விட்டது? கிருஷ்ண விக்கிரகம் மாதிரி பேரக் குழந்தை பிறந்தவுடனேயே, ஒரு பத்து நாட்கள் பிள்ளையோடு தங்கி, குழந்தையை ஆசை தீரக் கொஞ்ச வேண்டும் என்று அவள் விரும்பத்தான் செய்தாள். "மரியாதை கெட்டுப் போகும்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, பாசத்துக்கு அணை போட்டாள்.... ஓராண்டு மறைந்தது. குழந்தையின் ஆண்டு நிறைவை விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஒரு வயதுக் குழந்தையின் முகமும் அழகும் கண்ணைவிட்டு அகல மறுத்தன. (குழந்தை அப்படியே தகப்பன் வழிப் பாட்டியின் சாயல்!)

காலம் சுழன்றது. "குழந்தை பேசுவான். ஓடுவான். விளையாடுவான்!" என்றெல்லாம் நினைத்து நினைத்துத் தன் பாசத்துக்கு உரமும், தன் ஏக்கத்துக்குப் பலமும் சேர்த்தாள் பார்வதி. நாட்டுப்பெண் வத்ஸலா மாதம் தவறாமல் குழந்தை ரமேஷின் விளையாட்டுக்களை வர்ணித்துக் கடிதம் எழுதினாள். ஒவ்வொரு கடிதத்திலும், "நீங்களும் மாமனாரும் ஒரு மாதம் வந்து இருங்களேன் அம்மா!" என்று வருந்தி அழைத்தாள். பார்வதியின் கணவர் மகாலிங்கமும், "போய் வருவோமே, பாரு! அவாளும் ஆசைப்படறா! நமக்கும் பொழுது போகும்!" என்றார். (அவர் ரிடையராகி இரண்டாண்டுகள் கழிந்திருந்தன) ஆனால் பார்வதியோ, "நாம் போய்த் தங்காததால்தான் மரியாதை மிஞ்சறது.... அது கெட்டுப் போகணுமா?" என்று தட்டிக் கழித்துக் கொண்டே வந்தாள்.

கடைசியில், குழந்தைக்கு ஐந்து வயதான பிறகு, பார்வதியால்கூடப் பாசத்துக்கு அணை போட முடியவில்லை..... "போய்ப் பத்து நாட்களிருந்து குழந்தையைப் பார்த்துவிட்டு வரலாம்!" என்றவள், துணிமணிகளோடும் விளையாட்டுப் பொருள்களோடும்; கணவரோடும் ரயிலேறினாள்.....

ரயில் பிரயாணத்தின் போது, தன் மகன் பாலசந்திரன் ஐந்து வயதாயிருந்த காலத்தையும், அப்போது நிகழ்ந்த சில சம்பவங்களையும் நினைத்துக் கொண்டாள் பார்வதி.


"அந்த நாளிலே பாலு என்னமாய்த் துஷ்டத்தனம் பண்ணுவான், நினைவிருக்கா? அதே பாலுதான் இப்போ வளர்ந்து பொறுப்பான குடும்பத் தலைவனாயிருக்கான். நாம் அவன் குழந்தையோடு சீராடப் போயிண்டிருக்கோம்! நினைச்சால் நம்பவே முடியலே!" என்றாள் பார்வதி.

"காலம் பறக்கிறது, பாரு ..நேத்துத் தான் போலிருக்கு." ரயில் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தவள், சிந்தனைச் சுழலில் சிக்கி விட்டாள் என்பதை மகாலிங்கம் புரிந்து கொண்டார்...

"என்ன யோசனை, பாரு?"

"பாலு ஆறு வயசாயிருந்த போது ஒரு தடவை உங்கள் அப்பா அம்மாவிடம் போய் வாய்க் கூசாமல் 'உங்களைப் பிடிக்கலே'ன்னு சொன்னானே, நினைவிருக்கா?"

மகாலிங்கத்துக்குச் சட்டென்று அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது. அந்த நாட்களில் உள்ளூரிலேயே இருந்த பார்வதியின் பெற்றோர்கள் அடிக்கடி பெண்ணைப் பார்க்க வந்து போய்க் கொண்டிருந்தார்கள். வரும்போதெல்லாம் பாலுவுக்கு விதம் விதமான விளையாட்டுப் பொருள்களை வாங்கி வந்தார்கள். அதனால் பாலு அவர்களிடம் அதிகமாக ஒட்டிக் கொண்டதில் வியப்பில்லை. மகாலிங்கத்தின் பெற்றோர்கள் தம் பெரிய பிள்ளையோடு தங்கியிருந்தார்கள். இரண்டாவது பிள்ளையான மகாலிங்கத்தை எப்போதாவது வந்து பார்ப்பதோடு சரி ... ஒருமுறை அவர்கள் வந்தபோது பாலு அவர்களிடம் போய், "எனக்கு உங்களைப் பிடிக்கலே. எங்க ஊர் தாத்தா பாட்டியைத்தான் பிடிச்சிருக்கு!" என்றான். பார்வதி உடனே குழந்தையின் வாய்மேல் ஓர் அடி அடித்து, "போக்கிரி!



பெரியவாகிட்டே அப்படியா பேசறது?'' என்று சினந்தாள். அதற்கு மகாலிங்கத்தின் தாய், ''குழந்தையை அப்படிச் சொல்லச் சொன்னது நீ தானே? மகா சாதுவாட்டமா இப்போ ஏன் அவனைக் கண்டிக்கிறே?'' என்றாள்.

அந்தச் சம்பவத்தை இப்போது, இந்த ஐம்பது வயதில், நினைத்துப் பார்த்த பார்வதி, ''எத்தனை அபாண்டமா உங்க அம்மா என் மேல் பழி சுமத்தினாள்! குழந்தைகள் பேசின பேச்சைப் பெரிசு பண்ணலாமா?'' என்றாள்.

''கூடாதுதான். குழந்தைகளுக்கு மிகமிகச் செழிப்பான கற்பனா சக்தி. கூசாமல் பொய் சொல்வார்கள். பெரியவர்கள்தான் இதைப் புரிஞ்சுக்கணும்... இந்தப் பொய் வெறும் ''டூப்'' என்கிற ரகத்தைச் சேர்ந்ததுதானே தவிர, இதில் பெரிசாகத் தப்புக் கண்டுபிடிக்கக் கூடாது. பாரு! அந்த இரண்டணா சம்பவம் உனக்கு மறந்து போச்சா?'' என்றார் மகாலிங்கம்.

''மறக்குமா என்ன?''

பார்வதி அந்தச் சம்பவத்தையும் நினைத்துப் பார்த்தாள். அப்போது பாலு ஏழு வயதுச் சிறுவன். ஒருநாள் மகாலிங்கத்தின் தாய் அவனை அழைத்துக் கையில் இரண்டணா கொடுத்து. ''சாக்லேட் வாங்கிச் சாப்பிடு!'' என்றாள். குழந்தைகளுக்குச் சிறு வயதில் பணம் கொடுத்துப் பழக்கப்படுத்துவது தவறு என்று நினைத்த பார்வதி மாமியாரிடம், ''கொடுக்காதீங்க! அவன் கண்டதை வாங்கிச் சாப்பிடுவான்!'' என்றாள்.

''பரவாயில்லே. ஒருநாள் தானே!'' என்றாள் மாமியார்.

மறுநாள் பாலு பாட்டியிடம் சென்று, ''பாட்டி! நான் ரெண்டணாவுக்குச் சாக்லேட் வாங்கினேன்!'' என்றான்.

''சமர்த்து!'' என்றாள் பாட்டி.

''அம்மா தினம் சாக்லேட் வாங்க நாலணா தருவாள், பாட்டி!'' இது அப்பட்டமான, முழு பொய்!

பாட்டியின் முகம் உடனே கறுத்தது. ''ஓஹோ! நான் கொடுத்த காசு சொல்பம் என்கிறதைக் குத்திக் காட்டத்தான் கொடுக்காதீங்கோ என்று குறுக்கே நின்றாளா உன் அம்மா?'' இப்படிச் சொன்னவள் இத்தோடு நிறுத்தாமல் பார்வதியை அழைத்து நாவினால் சுட்டுப் பொசுக்கி விட்டாள்.

இப்படியே ரயில் பிரயாணம் முழுதும் சம்பவங்களைப் பரிமாறிக் கொண்டு, பிள்ளை வீருந்த ஊரை வந்து அடைந்தனர் மகாலிங்கம் தம்பதியார்.

ஐந்து வயது ரமேஷின் சுட்டித்தனத்தில் பார்வதி மயங்கிப் போய்க் கிடந்தாள்,-- சுமார் ஆறு நாட்கள். குழந்தை என்னமாய் 'நர்ஸரி ரைம்ஸ்' சொல்கிறான்! வத்ஸலா சுலோகங்கள் வேறு கற்றுக் கொடுத்திருந்தாள். குழந்தையின் நாவில்தான் என்ன ஸ்பஷ்டம்! சிறு பாண்டும் ஷர்ட்டும், காலில் ஸாக்ஸும் ஜோடுமாய்ப் பள்ளி பஸ்ஸில் ஏறிச் செல்லும் அழகுதான் என்ன! ஒளி மயமான கண்களும், பற்கள் தெரிய வாய் விட்டுச் சிரிக்கும் அழகும் ....

இன்ப மயமாகக் கழிந்த நாட்களில் சட்டென்று ஒரு நெருடல் ....

அன்று ஞாயிற்றுக் கிழமை. பிற்பகல் நேரம்... நல்ல வெய்யில் ...

மகாலிங்கம் வாசலறையில் மகனோடு பேசிக் கொண்டிருந்தார். வத்ஸலாவும் பார்வதியுமாகக் கடைத் தெருவரை போய் வருவதாகக் கிளம்பினர்.

சோதனையாக, அணிந்து கொண்டு இரண்டடி வைத்தவுடன் பார்வதியின் செருப்பு அறுந்து விட்டது. உடனே வத்ஸலா, ''நான் புதுச் செருப்பு வாங்கியிருக்கேன், அம்மா... இதோ கொண்டு வரேன்!'' என்று விட்டு உள்ளே விரைந்து. ஒரு புத்தம் புது ஜோடியோடு வந்து. அதை மாமியாரின் கால்களுக்கருகே வைத்து விட்டு, மறுபடியும் உள்ளே சென்றாள்.

பார்வதி செருப்புக்குள் கால் இட்டவுடன்— ''பாட்டி! எங்கம்மா செருப்பை நீ போட்டுக்கக் கூடாது. அழுக்காயிடும்! கழற்றி வை!'' என்றான் ரமேஷ்.

பார்வதி தேள் கொட்டி விட்டது போல் காலை உதறி விட்டு அறுந்த செருப்பையே



மணக்கும் பாசம்

ருக்மிணி பார்த்தசாரதி

அணிந்து கொண்டான். முகம் கறுத்துச் சிறுத்து விட்டது. உள்ளே சென்ற வத்ஸலா திரும்பி வந்து, ''ஏன் அம்மா, செருப்பு சரியாயில்லையா?'' என்ற போது, பார்வதி யின் முகம் போன போக்கு இருக்கிறதே ...

''குழந்தைக்கு இத்தனை கரிசனம் ஏது?— வத்ஸலாவின் போதனைதான் இது!'' என்று நினைத்து வெகு நேரம் உள்ளுக்குள் குமைந்து கொண்டிருந்தாள் பார்வதி.

அடுத்த அறையிலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மகாலிங்கம், பார் வதியின் முகபாவத்தைப் பார்க்கவில்லை. பாலு தன் தாத்தா பாட்டியிடம் ''உங்களைப் பிடிக்கலை'' என்றது போல், ரமேஷ் தன் பாட்டியிடம், ''செருப்பைக் கழற்று!'' என்கிறான்! ''பிள்ளை தகப்பன் மாதிரி மகா துஷ்டு, படு கட்டி!'' என்று, அன்பும் செல்ல முமாக ரமேஷைப் பற்றி நினைத்துக் கொண் டார்.

இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட குமைச் சலைப் பார்வதி ஒருவரிடமும் வாய் விட்டுச் சொல்லவில்லை. ''பேசாமல் ஊருக்குக் கிளம்பி விட்டால் என்ன?'' என்று நினைத்தாள். ஆனால் மகாலிங்கத்தின் முகத்தைக் கண்ட போது, அந்த நினைப்பைத் தொடர முடிய வில்லை. மகனின் அருகில் நாட்டுப் பெண் ணின் பணிவிடைகள், பேரனின் ஸ்பரிசத்தில் அவர் எத்தனை நிறைவை அனுபவிக்கிறார்! இந்த நிறைவைக் கத்தரிக்க எனக்கு உரிமை யில்லை!'' என்று அவள் நினைத்துத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

இதோ! பத்து நாட்கள் முடியப் போகின் றன ... நாளை மாலை புறப்பட வேண்டும்...

காலை ஒன்பது மணியிருக்கும். ரமேஷைப் பள்ளிக்கு அனுப்பத் தயார்ப் படுத்தி மகா லிங்கத்திடம் விட்டு விட்டு, அவன் டிபன் பெட்டியில் உணவை வைத்து மூடி அதை அவன் பைக்குள் வைத்தாள் வத்ஸலா.

''தினமும் குழந்தைக்கு என்ன டிபன் கொடுத்து அனுப்பறே?'' என்றாள் பார்வதி.

''ரொட்டி, வெண்ணெய், ஜாம் இதுதான் அவனுக்குப் பிடிச்சிருக்கு!''

குழந்தையைத் தன் தோள் மீது அமர்த்திய வாறு வந்தார் மகாலிங்கம். வத்ஸலா உள்ளே சென்றாள் ...

''உனக்குப் பிடிச்ச டிபன்!'' என்றாள் பார் வதி, குழந்தையிடம்.

''ஆம்! ஆம்லெட்!'' என்றான் ரமேஷ் பளிச்சென்று.

''ஆம்லெட்டா?'' பார்வதி விழித்தாள்.

''ஆமாம். தினம் தினம் அம்மா எனக்கு ஆம்லெட்தான் தருவா...''

பார்வதி பதில் சொல்லவில்லை. நெஞ்சில் உணர்ச்சிகளின் குமுறல். ''குழந்தைக்கு ஆம்லெட் தருவதானால் நான் தடுக்கவா போகிறேன்? இல்லை, நான் ஆசாரம் பார்த் துக் கழுத்தறுப்பு செய்கிறவளா? அவள் பாடு, அவன் பிள்ளை பாடு ... இப்படி ஏன் என்னிடம் வத்ஸலா பொய் சொல்கிறாள்?''

வாசலில் பள்ளி பஸ் வந்து நின்றவுடன் ரமேஷ் தாத்தாவுக்கு 'டாட்டா' சொல்லி விட்டு பஸ்ஸை நோக்கி ஓடினான். அந்த வேகத்தில் அவனுடைய பை நழுவி விழுந்தது. டிபன் பாக்ஸின் மூடி திறந்து கொண்டது. மகாலிங்கம் விரைந்து சென்று அதைச் சரி யாக மூடிப் பைக்குள் இட்டு, பேரனின் தோளில் பையை மாட்டி விட்டார். ரமேஷ் ஓடிச் சென்று பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

மகாலிங்கம் மந்தஹாஸத்துடன் உள்ளே வந்தார். டிபன் பெட்டியில் ரொட்டி, வெண் ணெய், ஜாம்தான். ஆம்லெட் இல்லை. குழந் தைக்குத் தான் என்ன கற்பனா சக்தி! பாலு சிறுவனாயிருந்த போது தன் பாட்டியிடம், ''அம்மா எனக்குச் சாக்லேட் வாங்கித் தினம் நாலஞ்சு தருவாள்!'' என்று வாய் கூசாமல் பொய் சொன்னது போல், ரமேஷ் தன் பாட்டியிடம் 'ஆம்லெட் பொய்' சொல்லி யிருக்கிறான்!

மகாலிங்கம் தம்பதியார் பிள்ளை நாட்டுப் பெண்ணிடம் விடைபெற்றுக் கொண்டு ரயிலேறினார்கள்.

ரயில் நகர ஆரம்பித்ததும் மகாலிங்கம், ''ரமேஷ் எப்படி இருக்கான் பார்த்தியா, பாரு? வத்ஸலா குழந்தையை பஸ்ட் கிளா ஸாக வளர்த்திருக்கிறாள். என்ன துரு துருப்பு, என்ன புத்தி! அப்படியே பாலுவின் சுபாவம் ரமேஷுக்கு!'' என்றார்.

''போதுமே! வத்ஸலா தன் அல்பத்தனத் தையெல்லாம் குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்திருக்கா!''

''என்னது?''

''பின்னே என்னவாம்? குழந்தை தானா கவா செருப்பைக் கழற்றி வைன்னு சொன் னான்? வத்ஸலா வெட்கமில்லாமல் பொய் சொன்ன போது, குழந்தை 'ஆம்லெட் தினம் சாப்பிடறேன்'னு சொல்லி, பொய் யைப் போட்டு உடைச்சான்.''

''பாரு! பாரு! பாலு சின்னவனாய் இருந்த போது நடந்த சம்பவங்களை நினைச்சுப் பார்! நீ சொல்லிக் கொடுத்தா அவன் என் அப்பா அம்மாவைப் பிடிக்கலேன்னு சொன்னான்? அவன் சொன்ன நாலஞ்சு பொய்யைக் கூடவா நீ மறந்துட்டே? குழந்தைகள் வாய் கூசா மல் சொல்வார்கள் என்கிறது உனக்கா தெரியாது?''

''அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? பாலு மகா கட்டி... ரமேஷுக்கு அந்தக் கெட் டிக்காரத்தனம் வருமா? எனக்குச் சூது வாது தெரியாது ... வத்ஸலாவுக்கு உடம்பெல்லாம் விஷம். ஒரே பொய்யும் வேஷமுமாகத் தான் இருக்கா உங்க நாட்டுப் பெண்! என்னையும் அவளையும் ஒப்பிட்டு நீங்க பேசறது அநியா யம்!'' பார்வதியின் கண்கள் குப்பென்று நிறைந்தன.

மகாலிங்கம் பதில் பேசவில்லை... மாமியார் பதவி கிடைத்தவுடன் 'மாமியார் நியாய'மும் தோன்றி விடும் விந்தை அவர் வாயை அடைத்து விட்டது!



திலீப்குமாரோடு ஒரு!

தங்கள் குடும்பத் தொழிலான பழ வியாபாரத்தை விட்டுவிட்டு சினிமா வில் நடிக்க ஆரம்பித்த திலீப் குமாரோடு அவருடைய தந்தை பேசுவதையே விட்டு விட்டார். மரணப் படுக்கையில் இருக்கும்போதுதான் பேசினார்.

— ஆடம் பி ஸ்க - கே.ஆர்.

ஆர்வத்தில் கடந்த பல ஆயிரம் மைல்கள்!



○ ஜெராசிமாவ் — சங்கரநாராயணன்.

ஒரு நூலைப் படித்துவிட்டு அந்த நூலின் ஆசிரியரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் ஆயிரக்கணக்கான மைல் இடைவெளியையும் பொருட்படுத்தாமல் ஒரு வாசகர் புறப்பட்டு வந்ததாக எப்போதேனும் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஹிந்து மத சாஸ்திரப் பிரிவுகளுள் ஒன்றான தாந்திரிகம் பற்றிய தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளார், டாக்டர் ஏ. வி. ஜெராசிமாவ்.

''முக்கியமாக மாஸ்கோவில் நான் படித்த இந்திய நூலாசிரியர்களைச் சந்தித்து விரிவான விளக்கம் பெற வேண்டும் என்ற ஆர்வமே என்னை இந்தியாவுக்கு இழுத்து வந்திருக்கிறது'' என்கிறார், ஜெராசிமாவ்.

மாஸ்கோவில் உள்ள கீழ்த் திசை மொழி இயல் மற்றும் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் ஓர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றி வரும் ஜெராசிமாவ் சம்ஸ்கிருத மொழியில் வல்லுநராக விளங்குகிறார். இவரிடம் உள்ள ஓர் அதிசய ஆற்றல்: பகவத் கீதை, ஸௌந்தரிய லஹரி ஆகியவற்றில் அத்தியாய எண்ணையும், சுலோகத்தின் எண்ணையும் இவரிடம் குறிப்பிட்டால் போதும். உடனே அந்த சுலோகத்தைத் தங்குதடையின்றித் தெளிவான உச்சரிப்பில் ஒப்பிக்கிறார். இவ்வளவுக்கும் சம்ஸ்கிருத மொழியை ஆசிரியர் யாருமின்றிச் சுயமாகவே புத்தகங்கள் மூலம் கற்றவர் ஜெராசிமாவ்.

தற்செயலாகச் சில அரிய நூல்கள் அவரது பார்வைக்கு வந்தன. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த எம். பி. பண்டித் எழுதிய தந்திர சாஸ்திரம் பற்றிய விளக்கக் குறிப்புகள், எஸ். சங்கர நாராயணன் எழுதிய 'ஸ்ரீசக்ரம்', 'ஸ்ரீவித்யா' ஆகிய நூல்களை ஆர்வத்துடன் படித்த அவருக்குத் தாந்திரக சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அவரது ஆவலை நிறைவு செய்ய இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு முன்வரவும், இந்தியாவுக்கு வந்து பல்வேறு சம்ஸ்கிருத அறிஞர்களையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார் டாக்டர் ஜெராசிமாவ்.

பாண்டிச்சேரிக்குச் சென்று எம். பி. பண்டித்தைச் சந்தித்துப் பேசிய ஜெராசிமாவ், அவர் மூலமே சங்கர நாராயணனின் அறிமுகத்தையும் பெற்றுச் சென்னைக்கு வந்தார். தாந்திரிக சாஸ்திரம் பற்றிய விளக்கங்களைப் பெற சென்னையில் சங்கரநாராயணனை அவரது இல்லத்தில் சந்தித்தார், ஜெராசிமாவ்.

''எங்கோ இருக்கிற மாஸ்கோவில் எனது புத்தகங்களைப் படித்துவிட்டு என்னைக் காண ஓர் அயல்நாட்டவர் என் வீடு தேடி வருவது அபூர்வமான அநுபவம். தொன்மையான நமது தத்துவங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்பதற்கு இது ஒரு கண்கண்ட சாட்சியம்'' என்று இந்தச் சந்திப்பைப் பற்றிக் கூறுகிறார் சங்கரநாராயணன்.

சங்கரநாராயணனின் குடும்பமே சம்ஸ்கிருத மொழியில் புலமை பெற்றிருப்பது கண்டு ஜெராசிமாவுக்கு உற்சாகம் பீறிட்டுக் கிளம்புகிறது. சம்ஸ்கிருத மொழி நயங்கள் பற்றி அனைவரோடும் குதூகலத்துடன் உரையாடத் தொடங்குகிறார்.

சம்ஸ்கிருத மொழியில் புலமையுள்ள சங்கரநாராயணன் அசோக் லேலண்ட் நிறுவனத்தில் ஓர் உயர் அதிகாரியாக இருப்பதை அறிந்து அவருக்கு வியப்பு. சங்கரநாராயணன் ஒரு பேராசிரியராகவோ நூலாசிரியராகவோ இருக்கக் கூடும் என்றே நினைத்திருந்தார் ஜெராசிமாவ். சங்கரநாராயணனின் குடும்ப விருந்தினராக அன்றைய இரவு உணவை அங்கேயே முடித்துக் கொள்கிறார். சம்ஸ்கிருதத்தை ரசிப்பது போலவே சர்க்கரைப் பொங்கல், இட்டிலி — வெங்காய சாம்பார், தயிர்சாதம் ஒவ்வொன்றையும் ருசித்து உண்டு மகிழ்கிறார், அந்த ரஷ்யர்.

''தாந்திரிக சாஸ்திரம் பற்றி நம்மவர்களிலேயே பலருக்குச் சரிவர ஏதும் தெரியாது. அரை குறையாக அது பற்றி ஏதோ அறிந்தவர்களும் அதைத் தவறாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள். தாந்திரிக சாஸ்திரம் என்பது சாத்வீக வழிபாட்டு முறைக்கு முரணானது என்றும் மாய மந்திரமும் தந்திரமும் நிறைந்த பயங்கர வழிபாட்டு முறை என்றும் சிலர் நினைக்கிறார்கள்; உண்மையில் தாந்திரிக சாஸ்திரம் என்பது உலகாயதப் பலன்களையும் அவற்றின் இன்றியமையாத அவசியத்தையும் வலியுறுத்துவதே தவிர அபாயகரமானதோ பயங்கரவாதமோ அல்ல. டாக்டர் ஜெராசிமாவ் போன்ற ஓர் அயல்நாட்டு அறிஞர் தாந்திரிக சாஸ்திரம் பற்றி ஆராய முன்வந்திருப்பது தாந்திரிக சாஸ்திரம் பற்றிய பல தவறான அபிப்பிராயங்கள் மறைய மிகவும் உதவிகரமாக இருக்கும்'' என்கிறார் சங்கர நாராயணன்.

— மலர் மன்னன்



Creative Unit-A 1981-Tam

வட்ட மேஜை

'பார்த்வான்' நகர்வலக் கட்டுரை நன்றாக இருந்தது. 'இன்பத் தென்றல்' தொடர் கதை நல்ல சுவையுடன் செல்கிறது. பொதுவாகக் 'கல்கி' இதழ் தோறும் தனித்தன்மையுடன் செல்கிறது. சுவையான இலக்கிய நிகழ்ச்சிகள் இன்னும் வெளிவந்தால் நன்றாயிருக்கும்.

முன்பு கல்கியில் 'சிந்தனைக்குச் சில' என்ற தலைப்பில் திரு இரா. செழியன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். அதற்கேற்ப இங்குள்ள தமிழர்கள் மூலம் ஏறத்தாழ ரூ. 40 வரை நன்கொடை வந்துள்ளது. யார் பெயருக்கு எவ்வாறு அனுப்புவது என்று எழுதினால் நலமாக இருக்கும்.

நாகபுரி,
18–2–76 கி.சி.ரா. கிருஷ்ணன்

புதுதில்லியில் நிறுவப்படவிருக்கும் ராஜாஜி சிலைக்கென நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ எஸ். நாராயணஸ்வாமி, பொருளாளர், ராஜாஜி நினைவுச் சின்னக் கமிட்டி, 6, சித்தரஞ்சன் சாலை, சென்னை – 600018.
— ஆர்.

சிரிப்பு மேடை பக்கத்தில் ''பொது அறிவுக் கேள்விகள்'' பகுதியைப் படித்த போது, எனக்கு 1948ம் வருடத்திய எஸ். எஸ். எல். சி. வினாத்தாள் நினைவுக்கு வந்தது.

மாயூமதுரை ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் ஸ்ரீ என். எஸ். ராமச்சந்திர அய்யர் அவர்கள் விஞ்ஞான ஆசிரியர். (தற்போது தலைமை ஆசிரியராகக் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.) அவர் 9, 10 எஸ். எஸ். எல். சி. வகுப்புக்களுக்கு விஞ்ஞானம் ஆங்கிலம் போதித்து வந்தார். அவரது போதனை முறை மிகவும் எளிதாகவும் புரிந்து கொள்ளும்படியும் இருக்கும். இருந்த போதிலும் எங்களுக்கு ஒரு குறை. விடைத்தாள்களை எவ்வளவு நன்றாக எழுதினாலும் தாராளமாக மதிப்பீட்டெண்களை அவர் அளிப்பதில்லை. 1948ம் வருட எஸ்.எஸ். எல். சி. வினாத்தாள் மிகவும் எளிதாக இருந்ததால் ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே விடையளித்துவிட்டு ஸ்ரீ ராமச்சந்திர அய்யரிடம் நெஞ்சை நிமிர்த்தி விட்டுக் கொண்டு ஓடினேன்.

''பாருங்கள்! நூறு சத வீதம் பெறப் போகிறேன். தாங்கள்தான் இதுவரை எங்களுக்குக் குறைவான மதிப்பீட்டெண்களை வழங்கினீர்கள்!'' என்றேன். ஆசிரியர் சிரித்துக் கொண்டே எஸ். எஸ். எல். சி. வினாத் தாளைப் படித்தார். பின்னர் கூறினார். ''ஆறாம் வகுப்பு மாணவன்கூட இவ்வினாக்களுக்குச் சுலபமாகப் பதில் அளிப்பானே. எதற்கும் எஸ். எஸ். எல். சி. முடிவுகள் தெரிந்ததும் சொல்லு'' என்றார். கேள்வித்தாளில், ''பருத்தித் துணி எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?'' என்ற மாதிரியில் கேள்விகள் வந்திருந்தன.

மதிப்புத் தாள் கிடைத்த போது விஞ்ஞானத்தில் 65 சத வீதம் வழங்கப்பட்டிருந்தது. ஆசிரியர் மதிப்பீடே அதிகமாகத் தெரிந்து, அவரைக் காண நான் செல்லவில்லை!

புதுதில்லி
20–2–76 என். நாராயணன்

ஒன்று முதல் நூறு வரை மொத்தம் இருபது ஒன்பதுகள் இருக்கின்றன. 99-ல் உள்ள இரண்டு ஒன்பதையும் சேர்த்தால். ஏமாந்துவிட்டீர்களே!

செம்பூர்,
பம்பாய்–71 எஸ். ஜெயராமன்

இன்று காலை (19–2–76) சென்னை ஒன்று அலை வரிசையில் வானொலி தொடர் நாடகம் ''தேவாலயம்'' ஒலிபரப்பினார்கள். இது வாரா வாரம் வியாழனன்று காலை 6–30 முதல் 6–45 வரை எட்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகிறது. சென்ற வாரம் ஒலிபரப்பான ஏழாம் பகுதியையே இன்றும் மீண்டும் ஒலிபரப்பினார்கள். வாரம் ஒரு முறை பதினைந்து நிமிடம் ஒலிபரப்பாகும் ஒரு நிகழ்ச்சியைக் கவனித்துச் சரியாகச் செய்ய முடியாத நிலையிலா ஒரு வானொலி நிலையம் செயல்படும்? சரி, அப்படியே தவறாக நடைபெற்றுவிட்டாலும் ஓர் அறிவிப்பாவது செய்திருக்கலாமே? இனி இம்மாதிரி ஏற்படாமல் கவனிப்பார்களா?

சென்னை — 17
19–2–76 பி. ப. சுந்தர்

இருள்நீக்கி கும்பாபிஷேகம்



தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலூக்காவில் இருள்நீக்கியும் ஆதித்யபுரமும் அடுத்தடுத்த ஊர்கள். ஸ்ரீ ஸீதா தேவியைத் தேடி அலைந்த ஸ்ரீ ராமனின் மன இருளை நீக்கியதால் இந்தப் பெயர் வந்தது இருள்நீக்கி கிராமத்துக்கு. இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமிக்கு 17–3–76 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவதரித்த பெருமையையும் பெற்ற இவ்வூர்க் கும்பாபிஷேகத்துக்குப் பக்தர்கள் பொருளுதவி புரிந்து பேரருள் பெற வேண்டிய முகவரி:

செயலாளர், ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி ஆலயத் திருப்பணிக் குழு, இருள்நீக்கி கிராமம், மன்னார்குடி தாலூக்கா, தஞ்சை ஜில்லா.

ஷஷ்டியப்தபூர்த்தி

சென்னை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் ஆபீசராகப் பணிபுரியும் **ஸ்ரீ வி. விஜயராகவன்** அவர்களின் **ஷஷ்டியப்த பூர்த்தி** கல்யாணம் 31-1-76 சனிக்கிழமை யன்று சென்னையை அடுத்த அனகாபுத்தூர் பாலாஜி நகரில், அவரது இல்லத்தில் ஐந்து நாட்கள் வேத பாராயணத்துடன் அதி விமரிசையாக நடை பெற்றது. ஏராளமான நண்பர்களும், உற வினர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

நாளர்கள்/தங்கள்

வி. சௌந்தரராஜன் ஸ்ரீமதி சாந்தா எஸ். ராஜன்
வி. ரங்காச்சாரி ஸ்ரீமதி ஜயந்தி ரங்காச்சாரி
வி. சுதாமன்
குமாரி வி. பெருந்தேவி (alias) வனஜா (குமாரத்தி)



அருள்மிகு அண்ணாமலையார் திருப்பணிக் குழு, திருவண்ணாமலை

வட ஆற்காடு மாவட்டம்

மகா கும்பாபிஷேகம்

அருள்திரு உண்ணாமுலை உடனுறை அண்ணா மலையார் திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப் பெற்று மகா கும்பாபிஷேகம் நாளது ராக்ஷச வருடம் பங்குனி மாதம் 22-ம் நாள் (4.4-1976) ஞாயிறு காலை 8-15 முதல் 9 மணி வரையில் ரிஷப லக்னத்தில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் இதுவரையில் நடைபெறாத முறையில் வெகு சிறப்பான முறையில் யாக குண்டங்கள் அமைக்கப்பெற்று 200 தேர்ச்சி பெற்ற சிவாச் சாரியர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். மகா கும்பாபிஷேகம் முடிந்து 5-4-76 முதல் 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தில் பங்குபெற விரும்புவோர் நாள் ஒன்றுக்கு ரூ. 250/- கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

செயலாளர்

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில், திருப்பணிக்குழு திருவண்ணாமலை, வ. ஆ.

டி. வி. சுப்பிரமணிய செட்டியார்
உப தலைவர், திருப்பணிக்குழு

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கும், வைத்தியத்திற்கும்

லலிதா பார்மஸி

கும்பகோணம்

எமது பிரதம டாக்டர் **வி. ஆர். லக்ஷ்மிகாந்த சர்மா** அவர்கள் எமது சென்னை பிராஞ்சுகளுக்கு, கீழ்க்கண்ட தேதிகளில் விஜயம் செய்து வைத்திய ஆலோசனை அளிப்பார்கள்.

1. 5-3-76

60-B, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை-600004
போன்: 73007

2. 6-3-76

நெ. 6, ரெங்கனாதன் தெரு, தி. நகர், சென்னை-600017
போன்: 441454

வைத்திய ஆலோசனை நேரம்:
காலை 8 to 11, மாலை 4 to 7

குறிப்பு: கடிதம் மூலம் வைத்திய ஆலோசனை பெற விரும்புகிறவர்கள் 25 பைசா தபால் தலையுடன் தலைமை அலுவலகத்திற்கு எழுதக் கோருகிறோம்.



பலத்திற்கும் ஆரோக்கியத்திற்கும்

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

1898 முதல் பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம் (பி)லிமிடெட் சென்னை-17.



பதில் அறிக்கைகள்

அரசியல் கட்சி மாறும் நபர்கள் அறிக்கை விடு கிறார்கள். அந்தப் பாணியில் சரக்கு மாஸ்டர் சப்பாணி, கம்பவுண்டர் கார்மேகம், வக்கீல் குமாஸ்தா வராக சாமி போன்றவர்களின் காரசாரமான அறிக்கைகளை முகுந்தன் அளித்திருந்தார் (15-2-76 கல்கி). சரி, இந்த அறிக்கைகளைப் பார்த்து விட்டு முன்னாள் முத லாளிகள் சும்மாவா இருப்பார்கள்? அவர்களும் பதி லுக்கு அறிக்கை விடமாட்டார்களா? இதோ அவை:

'நியோ கிருஷ்ணபவான்' முதலாளி சட்டோஜி ராவ்

என் அருமை நண்பராகவும் சரக்கு மாஸ்டராகவும் இருந்த சப்பாணியின் அறிக் கையைப் பார்த்தேன். வருத்தமடையவில்லை. பரிதாபப்பட்டேன். வடை சுடத் தெரியாமல் எண்ணெயை உடலில் தெறித்துக் கொள் பவர் என்பதையும் மசால் வடைக்காக மாவு அரைக்க வக்கில்லாதவர் என்பதையும் அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். நான் என்னமோ அசகாய சூரர் போலவும் அவரை நம்பித்தான் இந்த ஓட்டல் நடத்துகொண்டு இருந்தது போலவும் அறிக்கை விடுகிறார். இடது கை பெருவிரல் குறியான இவருக்கு அறிக்கை எழுதவாவது தெரியுமாவது? எல் லாம் தெருக்கோடி காவராகபெ ஆசாமியின்-அதாவது ராமபவன் — கைவண்ணம் என்று எனக்குத் தெரியும்!

அருமை நண்பர் சப்பாணி சொல்கிறார்: பாதாம்கீருக்குப் பருத்திக் கொட்டையை அரைத்துவிடச் சொன்னேனாம். பெருங்காயப் பவுடருக்குப் பதில் மூக்குப் பொடியைச் சாம்பாரில் போட்ட மகானுபாவன் அல் லவா இவர்! முப்பத்து ஆறு ஆண்டுகளாக உழைத்தாராம். வேலைக்கு வரும்போது சப்பாணியாகத்தான் இருந்தார். இன்று குண்டு பட்டாணியாக மாறி இருப்பதன் ரகசியம், என் ஸ்டோர் ரூம் பாதாம்பருப்பு டப்பாவைக் கேட்டால் தெரியும்.

டாக்டர் புருஷோத்தமன்:

பதினைந்து வருடங்கள் என்னுடன் தோளுக்குத் தோளாக நின்று பணிபுரிந்த கம்பவுண்டர் கார்மேகம் என்னைப் பற்றித் தாறுமாறாக எழுதி வெளியிட்ட அறிக்கை யைப் பார்த்தேன். இத்தனை மட்டமான ஆசாமியை இதற்கு முன்பே வேலையை விட்டு அனுப்பாதது என் முட்டாள்தனம் என்பதை இப்போது உணர்கிறேன். இவர், மடித்துக் கொடுத்த மாத்திரை, கலக்கிக் கொடுத்த மிக்சர் போன்றவைகளைப் பற்றிப் பீற்றிக் கொள்கிறார். ஆஸ்பரின் மாத்திரைக் கும் பி-காம்ப்ளெக்ஸ் மாத்திரைக்கும் வித்தி யாசம் தெரியாதவர். பிரிஸ்கிரிப்ஷனில் வெள்ளை மாத்திரை, மஞ்சள் மாத்திரை, சிவப்பு மிக்சர், உயர பாட்டில், ரவுண்ட் டப்பா என்பது போன்ற குறிப்புக்களை நான் எழுதிக் கொடுப்பேன். அதைப் பார்த்து மருந்து கொடுத்தார்.

நான் மாடி வீடு கட்டியதற்கு ஏதோ இவர்தான் உதவி செய்ததாகக் கூறுகிறார், மறைமுகமாக. ஒரு விதத்தில் உண்மை. லட்சாதிபதியான என் தாத்தா — என்னை வளர்ப்பு எடுத்திருந்தவர் — ஒருநாள் தலை வலி மாத்திரை கேட்டபோது கார்மேகம் தூக்க மாத்திரைகளை எடுத்துக் கொடுத்து விட்டார். அதன் காரணமாகத் தாத்தா மண் டையைப் போட, எனக்குச் சொத்து கிடைத் தது. கார்மேகம் ஜெயிலுக்குப் போகாமல் வெளியே இருப்பதற்காகவாவது என்னிடம் நன்றி காட்ட வேண்டும்.

அட்வகேட் அரோகரசாமி:

என்னிடம் குமாஸ்தாவாக இருந்த வராகசாமி, வழக்கம்போல், தப்பும் தவறு மாக டைப் செய்து வெளியிட்டிருந்த அறிக் கையைப் பார்த்தேன். எனக்கு லா பாயின்டு களை இவர் எடுத்துக் கொடுத்தாராம். அய ஞன கேள்விகளைத் தயாரித்துக் கொடுத் தாராம். சிரிப்பு வருகிறது. மான நஷ்ட வழக்குப் போட்டு ஆறு மாதம் உள்ளே தள்ளி விடுவேன். போகட்டும் பிள்ளை குட்டிக்காரர்.

நான் நிறையச் சட்டப் புத்தகத்தைப் புரட்டியதாகக் கூறுகிறார். உண்மைதான். ஒரு சமயம் 'கிரிமினல் புரொசீஜர் கோடு'ல் மறந்துபோய் நூறுரூபாய் நோட்டை வைத்து விட்டேன். இவர் கண்ணில் பட்டுவிட்டது. அமுக்கி விட்டார். அதற்குப் பிறகு எல்லா சட்டப் புத்தகங்களையும் சதா புரட்டிக் கொண்டிருப்பார். சபலம் ஐயா, சபலம்! வராகசாமி, நீ போனதைப் பற்றி வருத்த மில்லை. போகிற இடத்திலாவது நாணயமாக உழை. நீ எங்கிருந்தாலும் வாழ்க.

மூல்சந்த் ஹிராசந்த்:

நம்ப டிரைவர் கன்னி பேன் உட்டு பூட் டான். போவட்டும். அறிக்கை வேறே உட் றான். நம்ப ஊட்டு பூரி-சப்ஜி மசாலா பால் அப்படி அவனெ பேச வெக்குது. காரா ஓட்டினான்? வவுத்தெரிச்சல். பென்ஸ் கார் வாங்கினேன். கீர் போடத் தெரியாமல் கீர் பாக்ஸை உடைச்சான். ஜெர்மனியிலேருந்து வரவழைச்சேன். இரண்டாயிரம் ஆச்சு. சம்பளத்திலே புடிக்காமே உட்டேன். அது என் தப்பு. அப்றம் இவன் ஜெனரல் மூத் தைய முதலி தெருலே ராஷா ஓட்டி ஒரு குழந்தையைக் கொன்னுட்டான். இத்தனை நாள் ஜெயில் களியைத் துன்னு கொண் டிருக்க வேண்டும், நான் ரூபா கொடுத்துச் சரிப்படுத்தினேன்.

இப்போ பேஜாரில்லாமல் விட்டே போயிருக் கான். அங்கேயாவது நல்லா நடத்துக்கிட் டாச் சரி.

பாலாஜி





24

க்ஷமா தன் சிந்தனை ஓட்டத்துக்கேற்ப நிலைமையை ஒருவாறு ஊகித்துக் கொண்டு, அதற்கேற்ப அநூப்புக்குத் தன் வீட்டுக்கு வந்திருக்கும் புது கவர்னஸை அறிமுகம் செய்து வைத்தாள். அவர்கள் மனத்தில் ஓடிய எண்ணங்களைப் பாவம், அவள் என்ன அறிவாள்? சில கணங்களுக்குப் பின்னரே, ரூபா தன் நிலைக்கு வந்தாள். தனது பதற்றத்தையும் படபடப்பையும் மறைப்பதற்காக அவள் அநூப்பின் எதிரிலிருந்து விலக நினைத்தாள். எனவே, எசமானியின் போர்வையையும் பையையும் எடுத்துக் கொண்டு போகும் சாக்கில் அவள் உள்ளே சென்று விட்டாள்.

அநூப்புமே அவளைப் பற்றிய சிந்தனையில் தன் வயம் இழந்திருந்தான். க்ஷமா அறிமுகம் செய்து வைத்ததை அவன் செவிசாய்த்துக் கேட்டதாகத் தோன்றவில்லை. ஆதலால், "என்ன ஒரே யோசனையில் ஆழ்ந்து விட்டாய்?" என்று கேட்டு க்ஷமா அவன் சிந்தனையைக் கலைத்தாள்.

"ஒன்றுமில்லை!" என்று சுதாரித்துக் கொண்டவன், "உங்கள் கவர்னெஸ் அறிவு மிக்கவளாகவும், பண்பில் சிறந்தவளாகவும் தோன்றுகிறாள்!" என்று முடித்தான்.

"பேஷ், பேஷ்! ஒரே பார்வையில் இத்தனை தூரம் புரிந்து கொண்டு விட்டாயே! ஆனால் பெண்ணைப் புரிந்து கொள்ளப் பல ஆண்டுகள் தவம் கிடக்க வேண்டி யிருப்பதாகவல்லவா பேசிக் கொள்கிறார்கள்!" என்று இடக்காகக் கூறினாள் க்ஷமா.

"இருக்கலாம். இருந்தாலும் சில முகங்களை ஒரே பார்வையில் புரிந்து கொண்டு விட முடிகிறது!" என்றவாறே அநூப் தன் பார்வையை அந்த வீட்டின் நாற்புறமும் ஓட்டினான். உள்ளே போன ரூபா திரும்பி வரக் காணோம். எத்தனை நேரம்தான் அவளை எதிர்பார்த்து உட்கார்ந்திருப்பது? பேசுவதற்கு ஏதாவது விஷயம் இருந்தாலாவது பொழுதைப் பேசி ஓட்டலாம். அதுவும் அந்த அகாலத்தில் உசிதமாகப் படவில்லை. எனவே விடை பெற்றுக் கொண்டு எழுந்தான்.

தன் அறைக் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அநூப்பும் க்ஷமாவும் என்ன பேசுகிறார்கள் என்பதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ரூபா சட்டென்று ஓர் இருட்டு மூலையில் மறைந்து கொண்டு அவன் புறப்பட்டுச் செல்வதை உற்றுப் பார்க்கலானாள்.

அநூப் அடியெடுத்து வைத்ததும், "புறப்படுபவர்களைத் தடுப்பது நியாயமில்லை. இரவு வெகு நேரமாகி விட்டது. ஜாக்கிரதையாகப் போய் வா. ஆனால் இப்படி அடிக்கடி வந்து கொண்டிரு!" என்றாள் க்ஷமா.

"நீங்கள் சொல்ல வேண்டுமா? கட்டாயம் வருகிறேன்!" என்ற அநூப் தன் கண்களால் இருட்டு மூலைகளையும் துழாவினான். ரூபா நின்றுகொண்டிருந்த மூலையைத் தேட்டை போட்டவாறே.. "அஜீத் அண்ணாவும்தான் ஊரில் இல்லை. அவர் இல்லாத காலங்களில் உங்கள் நலன்களை விசாரித்துப் போக வந்து போவது என் கடமை அல்லவா?" என்றான்.

அநூப்பின் அடி ஓசை தொலைவுக்குச் சென்று தேயும்வரை ரூபா காதுகளைத் தீட்டி வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் வரை இனம் தெரியாத தொரு பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அவள் இதயம் சிறுகச் சிறுக விடுபட்டது. ஆயினும் உடல் நடுக்கம் இன்னும் அடங்கிய பாடில்லை. அவன் வாய் மூடி மௌனியாகக் கார் புறப்படும் ஒலியைச் செவிமடுத்தாள். அது தொலைவில் ஓடித் தேயும் ஒலியும் அவள் காதுகளில் விழுந்தது.

ரூபா நிம்மதியாக ஹாலுக்குத் திரும்பி வந்தாள். வாசற்புறக் கதவைத் தாழிட்டு விட்டு எஜமானியைத் திரும்பிப் பார்த்தாள். அவளது உதடுகளில் பொருள் பொதிந்த புன்னகை ஒன்று துறுதுறுவென்று இழையோடிக் கொண்டிருந்தது.

"ரொம்ப நல்ல பையன்; கெட்டிக்காரப் பையன். அதோடு பொறுப்புள்ள பையன். இரவு இத்தனை நேரம் கழித்தும் பொறுப்போடு கொண்டு வந்து விட்டுப் போகிறான் பார்!" என்றாள் க்ஷமா.

"உங்களுக்கு ஏதாவது சொந்தமா?" என்று ரூபா தயங்கியவாறே கேட்டாள்.

''ஆமாம். என் கணவர் அஜீத் இன்று உடல் நலம் குன்றிய தம் அண்ணாவைப் பார்த்து வரப் போயிருக்கிறார் இல்லையா? அந்த அண்ணாவுக்கு இவன் மைத்துனன். அதாவது என் ஓரகத்தியின் தம்பி. சண்டிகரில் இருக்கிறான்!''

இதைக் கேட்டதும் ரூபாவுக்கு நஞ்சுள்ள தேள் நறுக்கென்று கொட்டி விட்டாற்போலக் கடுத்தது. அவளுக்கெதிரே அநூப்பின் தமக்கையின் முகம் தோன்றியது. அவளது வாழ்க்கையின் போக்கையே மாற்றி அமைத்து விட்ட நிகழ்ச்சியும் நினைவில் தோன்றி அவளைத் திக்குமுக்காட வைத்தன. அவளால் வெகு நேரம் வரை பேசாமல் இருக்க முடியவில்லை. பரபரத்த உள்ளத்துடன், ''அவன் தன் கணவரைப் பார்க்கப் போகவில்லையா?'' என்று க்ஷமாவைக் கேட்டாள்.

''இல்லை. என் ஓரகத்தி மிகவும் பிடிவாதக்காரி. கணவரிடம் ஏதோ மனத்தாங்கல். அதற்காக அவரை அறவே ஒதுக்கி விட்டாள்!''

''அவள் தம்பியும் அவள் கட்சிதானா?''

''இல்லை. இருந்தாலும் அவள் கருத்துக்கு எதிராகப் பேசும் துணிவு அவனுக்கு இல்லை. பிள்ளைப் பருவத்திலிருந்து அவனைத் தன் பிள்ளை மாதிரி வளர்த்திருக்கிறாள் அவள். அதனால் அவன் தன் அக்காளைத் தாயாராகவே பாவிக்கிறான்; தாயாருக்கும் மேலாக மதிக்கிறான். சிம்லாவில் அவன் ஒரு பெண்ணைக் காதலித்ததாகவும், அக்காள் அதற்குச் சம்மதம் தெரிவிக்காததால் அந்தக் காதலை அவன் உதறும்படி ஆகிவிட்டதாகவும் கேள்விப்பட்டேன்!''

''ஏன் அப்படி?'' பயந்து கொண்டே கேட்டாள் ரூபா.

''ஏழைப் பெண்ணாம். அதோடு வேறு இனத்தைச் சேர்ந்தவளாம்.''

''ஏன், அக்கா! சாதி வேறுபாடு, உயர்வு தாழ்வு போன்ற கருத்துக்களை நீங்களும் ஏற்கிறீர்களா?''

''ஏற்கவில்லையென்றாலும், சமூகத்துக்குப் பயந்துதானே செயல்பட வேண்டியிருக்கிறது?''

க்ஷமாவின் இந்தச் சொற்கள் ரூபாவின் இதயத்தை அம்பெனத் துளைத்தன. அவள் வாழ்வுச் சுழலில் வகையாகச் சிக்கிக்கொண்டு விட்டாள். அந்தச் சுழலிலிருந்து அவளை வெளியேற்றும் ஆற்றல் யாருக்குமே இல்லையென்று தோன்றியது. எனவே, அதற்கு மேல் பேச்சுக் கொடுக்கத் தோன்றாமல் மௌனமானாள்.

க்ஷமாவுக்கோ தூக்கம் கண்களைச் சுழற்றிக்கொண்டிருந்தது. அவள் ரூபாவை வீட்டின் கதவுகள் எல்லாம் தாழிடப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கச் சொல்லிவிட்டுத் தன் படுக்கை அறையை நோக்கி நடந்தாள்.

வெளியே, வாசலில் பொருத்தியிருந்த அழைப்பு அணி ஒலித்தது. இந்த வேளையில் அழைப்பு மணியா? க்ஷமா துணுக்குற்று நின்றாள். வியப்போடும் திகைப்போடும் ரூபாவைப் பார்க்கலானாள். ரூபாவோ அந்த மணியோசையைக் கேட்டு அரண்டு போயிருந்தாள். இருந்தாலும் பயந்தவாறே சென்று மெதுவாகக் கதவைத் திறந்தாள். அநூப் திரும்பி வந்திருந்தான். அவளைக் கண்டதும் அவன் வெட்கத்தால் கூனிக் குறுகிப் போனான். அநூப் ரூபாவை மேலெழுந்த பார்வையாக ஒருமுறை பார்த்துவிட்டு, ''வண்டி நின்றுவிட்டது!'' என்று க்ஷமாவிடம் கூறினான்.

''ஏன்?'' க்ஷமா பரபரத்துப் போய்க் கேட்டாள்.

''என்ஜின் சூடேறி விட்டது. கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?''

''கொஞ்சம் என்ன? வேண்டியது தருகிறேன்!'' என்ற க்ஷமா, ''ரூபா! நீ தண்ணீர் கொடு. இதோ நான் போய் உடை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று கூறியவாறே, தன் படுக்கை அறையை நோக்கி நடந்தாள். உள்ளே நுழைந்து தாழிட்டுக் கொண்டாள்.


ரூபா இன்னும் தன் நிலைக்கு வராமல் தவித்தாள். பயத்தில் இமைகள் படபடக்க அநூப்பைப் பார்த்தாள்.

''தண்ணீர் கிடைக்கும் அல்லவா?'' அநூப் அவள் விழிகளோடு தன் விழிகளை மோத விட்டு, அவள் உள்ளத்தைப் புரிந்து கொள்ள முயல்கிறவன் போலப் பார்த்தான்.

ரூபா சட்டென்று தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு விடுவிடுவென்று உள்ளே போனாள். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு தம்ளரில் நீர் கொண்டு வந்தாள். அநூப் அதைத் தன் கையில் வாங்கிக் கொண்டு, ''ஒரு தம்ளர் போதாது; வாளி வாளியாக வேண்டும்!'' என்றான்.

தமிழாக்கம்
ரா. வீழிநாதன்





மின்சார கார் இருக்கட்டும்; மின்சார விமானத்தையே தயாரித்திருக்கிறார்கள், மேற்கு ஜெர்மனியில். 'எம். பி இ. ஐ. என்று அழைக்கப்படும் அந்த விமானம் அழகாகத் தரையிலிருந்து மேலே கிளம்பி ஒன்பது நிமிடங்கள் சுற்றிவிட்டு எந்தப் பழுதும் இன்றி இறங்கியது. எஞ்சினைத் தவிர மற்ற எல்லா அமைப்புக்களும், இப்போதைய விமானம் போலவே இருந்தன; 26 கிலோ வாட் சக்தியுள்ள பாட்டரி எஞ்சின்தான் புதிய உறுப்பு.

— காரவான் - முத்து

ரூபா ஒரு கணம் மௌனமாக நின்றாள். பிறகு தோட்டத்தில் உள்ள குழாயடியைச் சுட்டிக் காட்டினாள். அங்கேயே ஒரு வாளியும் கிடந்தது.

"அரை வாளி போதும். எடுத்து வர முடியுமா?" என்று கேட்டுவிட்டு, அவள் பதிலை எதிர்பார்க்காமலே, அநூப் வாசல் கேட்டைத் தாண்டிச் சென்றான்.

அநூப் நடந்துகொண்ட முறை ரூபாவுக்கு விந்தையாகப் பட்டது. இருந்தாலும் வேறு வழியின்றிக் குழாயடிக்குச் சென்று நீர் சேந்தலானாள்.

அநூப் வண்டியின் 'பானெட்'டைத் திறந்தான். அப்புறம் ரேடியேட்டரின் மூடியைத் திறந்தான். இலேசாக நீராவி வெளியேறலாயிற்று. அநூப்பின் பார்வை குழாயடியில் நீர் பிடித்துக் கொண்டிருந்த ரூபாவை நோக்கிப் பாய்ந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் ரூபா தண்ணீர் வாளியைத் தூக்கிக் கொண்டு கார் அருகில் வந்தாள். அநூப் அவளைப் பார்த்ததும் தம்ளர் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாக ரேடியேட்டரில் விட்டான். அது தீர்ந்ததும், அவள் வாளியிலிருந்து இன்னொரு தம்ளர் மொண்டு கொண்டான். ரூபாவைப் பார்த்து நன்றி தெரிவித்தான்.

அவள் பேசவில்லை. மௌனமாக வாளியை வைத்துக் கொண்டு நின்றாள். தம்ளர் காலியானதும் அவன் மீண்டும் தண்ணீர் மொண்டு கொண்டான்.

"வண்டி எப்பொழுதாவது சூடேறிவிட்டால், அதன் சூட்டைத் தணித்துக் குளிர வைக்க வேண்டியிருக்கிறது!" என்று கூறிய வண்ணம் அநூப் வண்டிக்குள்ளிருந்த டஸ்டரை எடுத்து அதைத் தண்ணீரில் நனைத்து என்ஜின் மேல் போட்டான்.

"நீ வேலை செய்யத்தான் வேண்டும் என்றிருந்தால் என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா? ஒன்றுக்கு மேல் ஒன்று நல்ல வேலையாகப் பார்த்துக் கொடுத்திருப்பேனே!"

"தண்ணீர்...?" ரூபா வாளியை நீட்டினாள்.

"என்னிடம் பேசக்கூடப் பிடிக்காத அளவுக்கு உனக்கு விரக்தி ஏற்படுவானேன்?"

"டாங்கி நிரம்பி விட்டது!" ரூபா ரேடியேட்டரைச் சுட்டிக் காட்டினாள்.

தண்ணீர் வழிந்து ஓடவே, அநூப் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்திவிட்டு அவளை நெருங்கி வந்து, "என் மேல் கோபமா? அக்கா உன்னிடம் ஏதாவது சொன்னாளா? நம் இருவருக்கும் இடையே இப்படி ஒரு விரிசல் ஏற்படக் காரணம்...?" என்று கேட்டான்.

ரூபா பதில் எதுவும் சொல்லாமல் திரும்பிப் போகலானாள். அநூப் விடுவிடுவென்று முன்னே சென்று அவள் வழியை மறித்தான்.

"வழி விடுங்கள்!" என்று கூறி ரூபா குனிந்து வாளியைத் தூக்கிக் கொண்டாள்.

"முடியாது. உன் மௌனம் எனக்குப் பெரும் சுமையாகக் கனக்கிறது. என் மனச் சுமையை இறக்கினால் ஒழிய..."

"வேறு வழியில்லை!"

"எனக்கும்தான் வேறு வழியில்லை. அதை ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்?" என்று எரிச்சலோடு கூறியவன், சட்டென்று தாவி ரூபாவின் தோள்களைப் பற்றி உலுக்கினான்.


அநூப்பின் ஸ்பரிசம் படவே, அவள் உடல் பதறியது. உதடுகள் நடுங்கின. இதயம் படபடத்தது. திடீரென்று காலோடு தலை ஒரு சிலிர்ப்பு! தண்ணீர் வாளி கையிலிருந்து நழுவி விட்டது. ரூபா கனவேகமாகத் தன் தோள்களை உதறிக் கொண்டு அங்கிருந்து போகலானாள். அநூப் அவளைத் தடுக்க முயன்றான். ஆனால் அவள்....? பயந்த புள்ளி மானெனப் பாய்ந்து, வீட்டுக்குள் ஓடிக் கதவைத் தாழிட்டுக் கொண்ட பின்னரே மூச்சு விட்டாள்.

அநூப் அப்படியே அறைந்த சிலையென நின்றுகொண்டு பார்த்துக் கொண்டிருந்தான். அவள் நடந்து கொண்ட முறை அவன் மனத்தை அலைபாய வைத்து விட்டது. என்னென்னவோ எண்ணங்கள் அவன் மூளையை அலைகளெனத் தாக்கின. அவற்றில் உழன்று சிக்கித் தவித்தவாறே அவன் குனிந்து வாளியையும் தம்ளரையும் எடுத்துக் கொண்டான். தோட்டம் வரைக்கும் வந்தான்.


அதற்குள் ரூபா தன் அறைக்கு ஓடி ஒளிந்து கொண்டு விட்டாள். அறை விளக்கை அணைத்து விட்டுப் பேசாமல் ஜன்னல் அருகில் போய் உட்கார்ந்தாள். பிறகு மெதுவாக ஜன்னல் திரையை விலக்கி வெளியே இருளில் எட்டிப் பார்த்தாள். அநூப் கீழே குனிந்து எதையோ எடுத்துக் கொண்டிருந்தான். அது அவனிடமிருந்து அவள் தப்பி வரப் பட்ட பாட்டில் அவளையறியாமல் நழுவித் தெருவில் விழுந்திருந்த சல்லாத் துணி!

அநூப் போய்விட்டான். காரின் ஒளி கூடத் தேய்ந்து உருத் தெரியாமல் போய்விட்டது. வெலவெலத்துப் போன ரூபா ஜன்னலைப் பிடித்துக்கொண்டு எத்தனை நேரம் நின்றாளோ தெரியாது. ஆனால் திரைச் சீலையை விலக்கி மறுமுறை தெருவைப் பார்த்தபோது இருள் குறைந்து வெளிச்சமாகத் தெரிந்தது. பின் நிலவு சந்திரன் உதயமாகி வான வீதியில் பவனி வரத் தொடங்கியிருந்தான்.

மறுநாள் மதியத்துக்கு அநூப் மீண்டும் க்ஷமாவின் வீட்டுக்கு வந்தான். கம்பெனிக்



வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்துச்
டிடர்ஜன்ட் வில்லை
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
மற்ருெரு
தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL/1922 R



வில்லை சோப்புகள்
சிக்கனம் தராதவை,
சுகாதாரமற்றவை: அவை
விரயமாக, மாசுபட, கிருமிகள்
தொற்ற இடம் தருவதே
காரணம்.
பிறவகை திரவ
சோப்புகள்
ஹோமகோல் தவிர,
மற்றெல்லா திரவ சோப்-
புகளுமே, சருமத்தைக் கெடு-
க்கும் அமிலக் கூழ் அடங்-
கியவை.
XYZ
LIQUID
SOAP
ஹோமகோல்
லிக்விட் சோப்
இது ஒன்றுதான், சருமத்தைப் பாதிக்காத
தாவர எண்ணெய் கொண்டு தயாரிக்கப்படும் திரவ சோப்.
உயர்வின் முத்திரை தரித்த திரவ சோப் இது ஒன்றே. பல நோக்கப் பயனுள்ள
ஹோமகோல், 1947 முதல் நம்பி உபயோகிக்கப்பட்டு வருகிறது.
நந்த் கிஷோர் கன்ஞ & ஸன்ஸ்,
•120 அருண் சேம்பர்ஸ், நார்தேவ் ரோடு, பம்பாய் 400 034. போன்: 378060.
•HS-36A, கைலாஷ் காலனி மார்க்கெட், நியூ டெல்லி 110 048.

கான வருமான வரிக் காகிதங்களில் க்ஷமாவின் கையெழுத்து வாங்கிப் போகும் வியாஜத்தில்! அவன் வந்ததில் க்ஷமாவுக்குச் சந்தோஷம். கையெழுத்து வாங்கிப்போகும் சாக்கிலாவது வந்தானே என்று! ஆனால் அந்தச் சாக்கில் வேறு ஒரு சாக்கும் மறைந்திருக்கிறது என்பது அவளுக்குத் தெரியாது. அவள் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கும்போது, அநூப்பின் திருட்டு விழிகள் வீடு முழுவதையுமே அல்லவா சல்லடை போட்டுச் சலித்துக் கொண்டிருந்தன! அவன் காண வந்தவள் கண்ணில் படுவாளா என்று தவித்துக் கொண்டிருந்தன!

க்ஷமா அவனுடைய திருட்டு விழிகளைக் கவனித்து விட்டாள். அவன் உள்ளத் துடிப்பை நாடி பிடித்துப் பார்த்தாளோ என்னவோ தெரியாது. ஆனால், "என்ன சேதி?" என்று மட்டும் கேட்டு விட்டாள்.

"ஒன்றும் இல்லையே!" என்று பதறி அடித்துக்கொண்டு பதில் சொன்னான் அநூப்.

"இல்லை, இத்தனை பறக்கிறாயே என்று கேட்டேன்!"

"அப்படி யொன்றும் இல்லை; கொஞ்சம் அவசரமாகப் போகணும்!"

"போ, ஆனால் கொஞ்சம் தேநீராவது குடித்துவிட்டுப் போ!"

"சரி!"

க்ஷமா தேநீருக்குக் குரல் கொடுக்கவே, அநூப்பின் இதயத் துடிப்பு அதிகமாகியது. இரவு தண்ணீர் கொண்டு வந்தது போல் இப்பொழுது ரூபாவே தேநீரும் கொண்டு வருவாளோ என்று எண்ணமிட்டான். அந்த எண்ணத்தைச் சுற்றித்தான் எத்தனை குட்டி எண்ணங்கள்! ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் ஹர்நாம் தேநீருடன் வரவே, அவனது அத்தனை கற்பனைகளும் சிதறி விட்டன. 'ஒருவேளை ரூபா க்ஷமாவிடம் நடந்தது நடந்தபடி உண்மையைக் கூறியிருப்பாளோ? அதனால் வேண்டுமென்றே க்ஷமா ரூபாவை அவன் எதிரே வரவேண்டாம் என்று தடுத்திருப்பாளோ?' — ஒரு கணத்துக்குள் அநூப்பின் சிந்தனை இத்தனை தூரத்துக்கு ஓடி விட்டது.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" க்ஷமா காகிதங்களை அவனிடம் திருப்பிக் கொடுத்தவாறே கேட்டாள்.

"ஒன்றும் இல்லை!" சிந்தனையிலிருந்து மீண்ட பரபரப்புடன் அநூப் சொன்னான். பிறகு உதடுகளில் முறுவலை நெளிய விட்டு, "லவனையும் குசனையும் எங்கே காணோம்?" என்று கேட்டான்.


"எதிரேயுள்ள பார்க்கில் விளையாடிக் கொண்டிருப்பார்கள்!"

"புதிய கவர்னெஸ் வந்ததில் அவர்களுக்குத் தலைகால் புரியாத சந்தோஷமாக்கும்!"

"ஆமாம். சுடிக்கையான பெண்; கலகலப்பான பேச்சு. குழந்தைகளுக்கு அலுக்காமல் நடந்து கொள்கிறாள். அதனால் அவை அவளைச் சுற்றி வருகின்றன!" என்றாள் க்ஷமா.

இதற்குள் ஹர்நாம் ஒரு தட்டில் இனிப்புகள் கொண்டு வந்து அநூப்புக்கு எதிரே வைத்தான்.

"இதெல்லாம் எதற்கு? நான்தான் தேநீர் போதும் என்றேனே!"



"டாக்டர் பெண் பார்த்தாரே! என்ன சொன்னார்?"

"பெண் பிடிச்சிருக்கு. அவ எக்ஸ்ரே, ரத்தப் பரிசோதனை ரிப்போர்ட் எல்லாம் அனுப்புங்க - பார்த்துட்டு அப்புறம் கல்யாணத்துக்குத் தேதி வைக்கலாம்னு சொன்னார்!"

— உ. வி.

"தெரியும். இருந்தாலும் வெறும் வயிற்றில் தேநீர் அருந்துவது உடல் நலத்துக்கு உகந்ததல்ல!" என்றான் ஹர்நாம்.

"சரியான ஆளப்பா நீ! ஹர்நாம் நீமட்டும் சமையற்காரனாக இல்லாமல் வைத்தியனாக இருந்தால், இதற்குள் இரட்டை மாடி வீட்டுக்குச் சொந்தக்காரனாகப் போயிருந்திருப்பாய்!"

"தொழிலை மாற்றுவதினால் அதிர்ஷ்டமும் மாறுவதில்லை, எசமான்! வைத்தியனாகப் போயிருந்தால் மிளகாய் அறைப்பதற்குப் பதிலாக ஒருவேளை மருந்து அரைத்துக் கொண்டிருப்பேனோ, என்னவோ?" என்றான் ஹர்நாம்.

அவன் பேச்சைக் கேட்டுச் க்ஷமா சிரித்து விட்டாள். அநூப்புக்கு அது பிடிக்கவில்லை என்றாலும் பேச்சைத் தொடருவதில் நாட்டம் செல்லவில்லை. எனவே, கடக் கடத் தேநீரைப் பருகிக் கோப்பையை வைத்துவிட்டு, "நான் வரட்டுமா?" என்று கேட்டவாறே எழுந்தான்.

"அதற்குள் என்ன அவசரம்? மெதுவாகப் போனால் போயிற்று!" என்றாள் க்ஷமா.

"இல்லை. நிறைய வேலை கிடக்கிறது" என்று கூறி அநூப் புறப்பட்டு விட்டான்.


அநூப் தன் காரைச் சாலையோரத்தில் நிறுத்திவிட்டுப் பார்க்குக்குள் சென்றான், கண்கள் தன் காதலியைத் தேடுவதிலும், காதுகள் அவள் பேச்சொலியைக் கேட்பதிலும், முனைப்பாயிருந்தன.

சிறிது தொலைவில் குழந்தைகளின் கொம்மாளக் கூச்சல் கேட்டது. அதைத் தொடர்ந்து சென்றவன், புல்வெளியில் குழந்தைகள் தன் அக்காளுடன் கண்ணாமூச்சி விளையாடுவதைக் கண்டான். மரங்களின் பின்னால் மறைந்து நின்று அவற்றின் விளையாட்டை ரசிக்கலானான். வீண் பொய் எதற்கு? ரூபாவின் அழகை ரசிக்கலானான். அவள் முன்னைக் காட்டிலும் இப்போது மகிழ்ச்சியோடு காணப்பட்டாள். அவளது சிவந்த ரோஜாக் கன்னங்கள் இன்னும் மெருகேறிச் சிவந்து காணப்பட்டன.

விளையாடிக் களைத்த அவள் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காகப் பசும் புல்லில் படுத்தாள். ஆனால் குழந்தைகள்

அவளை விடாப்பிடியாக இழுத்தன. அவள் என்னென்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தாள். ஓடியாடி விளையாடும் தெம்பே அவளுக்கு இல்லை. உடல் வியர்த்து விறுவிறுத்து விட்டிருந்தது. அவள் விட்ட குறுமூச்சும் நெடுமூச்சும் துருத்தித் தோற்றது என்று கூறும்படியாக இருந்தது. தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அநூப் அவளது மார்பகம் ஏறி இறங்குவதைக் கண்டே, அவளது இந்த நிலையை எடை போட்டான்.

ரூபா வெல்வெட்டுப் போன்ற புல்தரையில் வெகு நேரம் 'அக்கடா' என்று படுத்திருந்தாள். ஆனால் குழந்தைகள் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்தாமல் போகவே, வேறு விளையாட்டு விளையாடச் சம்மதித்தாள். அவள் ரப்பர் பந்தைத் தன் பலம் கொண்ட மட்டில் உந்தி வீசினாள். அது பறந்து மலர்ப் பாத்தியில் போய் விழுந்தது. ஓடிப் போய்ப் பந்தைப் பொறுக்கி வருமாறு குழந்தைகளுக்குப் பணித்துவிட்டு, மீண்டும் புல் தரையில் அமர்ந்தாள். அவள் பார்வை மட்டும் மலர்ப் பாத்தியை நோக்கி ஓடும் குழந்தைகள் மீதே லயித்திருந்தது. அவளையறியாமல் அப்படியே களைப்புத் தீரப் புல்லில் படுத்தாள்.



பத்திரிகை ஊழியர் ஒருவரை அவருடைய நாய் காப்பாற்றியிருக்கிறது. உத்தரப் பிரதேசத்து ஊழியரான அவர், தரையில் விழுந்து கிடந்த மின்சார ஒயரை மிதித்து விட்டார்; உடனே மயங்கி விழுந்தார். அதைப் பார்த்த அவருடைய நாய் ஓடி வந்து அந்த ஒயரைத் தன் வாயில் பற்றி இழுத்து அவரைக் காப்பாற்றி — தான் இறந்தது.

— நேஷனல் ஹெரால்டு - முத்து

அவளது மார்பகம் கடல் அலைகளைச் சிருஷ்டித்துச் சிறித் தணிந்து கொண்டிருந்தது.

அநூப் பார்க்கின் நாற்புறமும் ஒருமுறை பார்வையை ஓடவிட்டான். வெகு தொலைவுக்கு வெகு தொலைவு ஆள் நடமாட்டமே இருப்பதாக அவன் கண்களுக்குப் படவில்லை. எனவே, துணிந்து மரங்களின் மறைவிலிருந்து வெளிப்பட்டு, பசும் புல் தரையைச் செருப்புக் கால்களால் மிதித்துக் கொண்டு ரூபாவை நோக்கி நடந்தான். அவள் அருகில் சென்று அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானான். அவள் முகத்தில் கோடிட்டிருந்த கவலையும் வருத்தமும் சுவடு ஒழிந்து போயிருந்தன. அவளது அழகும் பருவச் செழிப்பும் அவனைத் தன் நிலை மறந்து வெறி கொள்ளச் செய்தன.

எதேச்சையாகத் திரும்பிய ரூபா அவனைக் கண்டதும் பதறி அடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அடங்கிய படபடப்பு மீண்டும் அதிகரிக்கவே, அவளால் எழுந்துகூட நிற்க முடியவில்லை. சிறிதுநேரம் இருவரும் ஒருவரை யொருவர் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். முதல் நாள் இரவு ரூபா தெருவில் விட்டு விட்டுப் போயிருந்த சல்லாத் துணியைப் பையிலிருந்து எடுத்த அநூப் ''இது உன் பொருள்!'' என்று கூறி நீட்டினான்.

நடுங்கும் கரங்களுடன் ரூபா அதை எட்டிப் பிடித்தாள். ஆனால் அநூப் சட்டென்று அதை அவள் கையில் சிக்காமல் இழுத்துக்கொண்டான். ''நீ அனுமதி அளித்தால், இதை உன் காதலின் சின்னமாக நான் வைத்துக்கொள்கிறேன்!'' என்றான்.

ரூபா அவன் உதடுகளில் குதி போடும் குறும்பைக் கண்டாள். மெதுவாகத் தன் ஆயாசத்தைத் தவிர்த்து எப்படியோ புல் தரையில் எழுந்து நின்றுகொண்டாள். சிறிது நேரத்துக்கு முன் உற்சாகத்துடன் ஓடியாடிய கால்கள் இப்போது தரையில் பாவாமல் துவண்டு துவண்டு தொய்ந்து போவதாக அவளுக்குத் தோன்றியது.

அநூப் அந்தச் சல்லாத் துணியை மப்ளராக்கித் தன் கழுத்தில் சுற்றிக் கொண்டே, ''நீ எவ்வளவுதான் என்னை விட்டு ஓட முயன்றாலும் நான் உன்னை விடப் போவதில்லை!'' என்றான்.

''இதோ, பாருங்கள்! இங்கிருந்து போய் விடுங்கள்! யாராவது பார்த்துவிட்டால் நன்றாயிராது!'' என்றாள் ரூபா துணிவை வரவழைத்துக் கொண்டு.

''தவறாகவும் இராது!''

''என் வேலையில் வந்து விடியும்!''

''என் வாழ்க்கையில் வந்து முடியும்!''

''நீங்கள் ஏன் என்னை மறந்து விடக் கூடாது?''

''பேஷாக மறந்துவிடலாம். என்றைக்கு நீ என்னை ஏமாற்றி மோசம் செய்வாயோ, அன்று உன்னைக் கட்டாயம் மறந்து விடுவேன்.''

''என்னை இப்பொழுதே ஏமாற்றுக்காரி என்று வைத்துக் கொள்ளுங்களேன்; மோசக்காரி என்று நினைத்துக் கொள்ளுங்களேன்!''

''அது எப்படி? வெற்றுப் பேச்சால் பயன் இல்லை. என்னைக் கேட்டால், விதி உன்னை ஏமாற்றுகிறது என்பேன். ஒருபுறம் நீ உன் அம்மாவுக்கு ஆற்ற வேண்டிய பணிப் பொறுப்பு; இன்னொரு புறம் நீ என் அக்காவிடம் கொண்டுள்ள பயம்...''

''உங்கள் அக்காவிடம் எனக்குப் பயமா? என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''பயம் இல்லையென்றால் நீ என் அக்காவிடம் அப்படிப் பேசியிருக்க மாட்டாய்!''

''எப்படி?''

''உன் மனத்தையே கேள்! நீ என்ன சொன்னாய்?''

''உங்கள் அக்காள் என்னைப் பற்றி உங்களிடம் என்ன சொன்னாள்?''

''நீ சிம்லாவில் அவளிடம் சொன்னவற்றையெல்லாம் சொன்னாள்!''

''......''

''ஏன் சொன்னாய், ஏன் சொன்னாய் அப்படி?'' ஆத்திரத்தில் சீறிய அநூப்பின் கண்கள் சிவந்து, முகம் 'ஜிவு ஜிவு' என்று ஆகிவிட்டது.

(தொடரும்)




இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!
சென்னை:
தேவிபாரடைஸ் • அகஸ்தியா (70MM) • புவனேஸ்வரி
(70MM ஏர்கண்டிஷண்ட்)
மற்றும்
தென்னாடெங்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
ஈஸ்ட்மென் கலர்
டைரக்ஷன்
C.V.ராஜேந்திரன்
ARIES

போட்டோ பேஜ்

தொடரும் சிரிப்பு ▼
புகைப்படம் — சந்தாமியான்

தொடங்கும் அழுகை ▼
புகைப்படம்—ஸ்டீபன் மோசஸ்





[இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கக் கலையழகோடு கூடிய கருத்தைக் கவரும் புகைப் படங்களை வரவேற்கிறோம். பரிசு உண்டு. பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும்.]

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.


அலங்காரத் துணிகளின் லீலா விநோதம்!
வெளிப்புறக் காட்சிகளின் வண்ண ஜாலங்கள்! இயற்கை தரும்
எழில் வண்ணங்கள்! இவற்றை இல்லத்தினுள் புகுத்துகின்றன
பாம்பே டையிங்கின் பரவசமூட்டும் ஃபர்னிஷிங்குகள்!
எண்ணற்ற வண்ணக் கோர்வைகள், நிறங்கள், நெசவுத்தரங்கள்—
டாப்பீஸ், பின்னிய ஜாக்கார்ட்ஸ், பிரிண்டெட் மற்றும் ப்ளெயின்.
வியப்பூட்டும் சொப்பன உலகம்போல் வீட்டினை அலங்கரித்து மகிழுங்கள்!
பாம்பே
டையிங்